506

உ

# மனமோகினி

## ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 1.] 1922௵ செப்டம்பர்௴ 1௳ [பகுதி 8

இந்த அமராவதி யென்னும் நாவல்
ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

2 5 OCT 1922

“ஆனந்தபோதினி” பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1922

காபிரைட்] [ரிஜிஸ்டர்ட்.

# மனமோகினி

## ஓர் மாதாந்தச் சஞ்சிகை

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெரும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதா யிருத்தலின், அதில்ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்ற இதனை ஆரம்பித்திருக்கின்றோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் வெளியாய் வருகிறது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. இதற்குச் சந்தாதாரராகச் சேர்வோருக்கு இரண்டரை ரூபாய்க்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்களை அடைதலும், சிரமமின்றி ஒவ்வொரு மாதத்திலும் வாசித்து வந்து ஒரு வருஷத்தில் இரண்டு புத்தகங்களை முடித்தலுமாகிய சௌகரியங்கள் கிடைக்கும். இதன் முதற் சஞ்சிகை 1922ளு பிப்ரவரி மீ 1உ வெளியாயாய்விட்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டதினால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

---

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

மார்க்கமிருக்கிறது. ஒரு சமயம் அது பயன்படாமற் போய்விட்டது, அப்போதென்ன செய்வது?

சீமாட்டி:—ஒருபோதும் அது தவறாது. அதற்காகவே குமரவேல் பாஞ்சாலநாட்டிற்குச் சென்றிருக்கிறான். அந்தக்குருவினிடம் சிக்கியிருக்கும் இரகசியம் மதனம்பாளுக்குப் பூரண அழிவை யுண்டாக்கத்தக்கதாகவே யிருக்கும். இன்றேல் அவள் அவனுக்குப் பணம் கொடுத்துக்கொண் டிருக்கமாட்டாள். ஆச்சு இன்றோ நாளையோ சங்கதி வந்து விடும்.

பிரபு:—சீமாட்டியே! அப்படி யிருந்தாலும் அதையே நம்பிக்கொண் டிருப்பது இப்போது முட்டாள் தனமே யாகும். தங்கள் விரோதியோ பூரணபலமடைந்திருக்கிறாள். தங்களுக்கோ ஒன்றுமே யில்லை. அரசன் தங்கள் நண்பர்களுக்கு ஏதோ அளித்தாலும், அதற்கு எத்தனையோ மடங்கு அதிகமான கெடுதி தங்களுக்கு செய்துவிட் டிருக்கிறான். முதலாவது உம்மை இராஜசபையிலிருந்து விலக்கிவிட்டது எவ்வளவு அவமானம்! சிறைச்சாலையில் நடந்த விஷயத்தைப்பற்றி தாங்கள் தெரிவித்ததற்கு வேண்டுமென்றே அந்தக்கவர்னரை வேலையினின்று நீக்கிவிட்டான். கர்னல் குமரவேலையும் அவன் பதவியிலிருந்து தாழ்த்தி படைத்தலைவனல்லாதபடி செய்துவிட்டான். அந்தோ அவ்வளவோடு விட்டானா! எவ்வளவு அவமானப்படுத்த வேண்டுமென்ற எண்ணமிருந்தால் அச்சங்கதிகளை ஊர முழுவதும் அறியும்படி செய்திருப்பான். எவ்வளவு மானக்கேடு நேர்ந்திருக்கிறது. பாமரஜனங்கள் தங்கள் பெயரைக் கூறித் தங்கள் புதல்வனை யவமானமாகப் பேசினார்க



சென்னை-600 005
18648

ளல்லவா. தாங்கள் அரசனைக்கண்டு மறுபடி எப்படி யாவது வசப்படுத்தமுயலலா மெனின் அது முடி யாத காரியம். ஏனெனில் தங்களை யரண்மனைக்குள் ளேயே விடக்கூடாதென்று அரசன் கட்டளையிட் டிருக்கிறுன். ஆகா! அரசன் செய்தது பெரிய அநீதம். இப்போது நாம் ஒன்று சேர்ந்து துணிகரமாக எதை யேனும் செய்யாமற் போனுல், இன்னும் பெருந்துன் பங்கள் நேரிடும் என்பதில் சந்தேகமில்லை. இனிமேல் தாங்கள் தங்கள் நாட்டு மாளிகையில் சென்றிருக்க வேண்டுமென்று கட்டளை யிடுவான். எங்களுக்கெல் லாம் எந்த வேளையில் என்ன ஆபத்து நேரிடுமோ தெரியாது." என்றுர்.

சீமாட்டி "பிரபுவே தங்களுக்குள் ஏதோ ஒரு ஆலோசனை இருக்கிறது" என்றுள்.

பிரபு:—"ஆம் உமது புத்திரன் மட்டும் அரசனுல் தான் கூறியபடி செய்யவல்லவனே" என்றுர்.

சீமாட்டி யதைக் கேட்டதும் ஓகோ இதில் என்ன மோ விசேஷமிருக்கிறது என்று உணர்ந்து, நமது புத்தி ரனே அரசனுகக்கூடும்போ லிருக்கிறதென்று உள்ளத்தில் பூரிப்படைந்து, "அவனைப்பற்றி தங்கள் மனதில் என்ன மோ விருக்கிறது" என்றுள்.

பிரபு:-ஒன்றுமில்லை தங்கள் புத்திரன் அரசனுக்குப் பிறந்த வன். ஆனுல் மனைவிக்குப் பிறந்தவ னல்லவே, எப் படிப்பட்டத்திற்கு வரலாகும் என்று கேட்பீர்கள். மனைவிக்குப் பிறக்காத புத்திரர்களும் சிம்மாசன மேறிய அத்தாட்சிகள் இல்லாமற் போகவில்லை. ஆதலால் அந்த ஆட்சேபனை யொன்றும் செய்யாது.

சீமாட்டி:—"அப்படியிருப்பினும் அரசன் இறந்தால் அவ

ருடைய தம்பி புதல்வனன்ருே பட்டத்திற்கு வருவான் " என்ருள்.

பிரபு.—ஆம். யாரும் முன் ஜாக்கிரதையோடு சிம்மாதனத்தைக் கைப்பற்றிக்கொள்ளா விட்டால்தான் அவன் பட்டத்திற்கு வருவான்.

சீமாட்டி.—முன் சாக்கிரதையாய்ச் சிம்மாதன மேறத் தக்கவர்கள் யாரிருக்கிருர்கள்?

பிரபு.—"ஏன் தங்கள் புதல்வராகிய செல்வராஜப்பிரபு தான். தடையென்ன?" என்றதே.

சீமாட்டி திடுக்கிட்டாளெனினும் தன் மகன் அரசனுய் விட்டால் தனக்குச் சகலவித அதிகாரமும் கிடைத்து விடும் என்று மனதிற் பட்டதே அவளுக்கு ஆவலும் சந்தோஷமும் உண்டாகிவிட்டன. "பிரபுவே! அப்படி நேரிடக்கூடும் என்று கருதுகிறீர்களா?" என்ருள்.

சீமாட்டியைக் கொஞ்சங் கொஞ்சமாய் தன் மனதி லிருக்கும் பெரும்பாதகச் செயலுக்கு உடன் படச்செய்ய வேண்டுமென்ற கருத்துடைய பஞ்சநாதம்பிரபு "கூடுமா! கொஞ்சம் தைரியமும் துணிகரமுமிருந்தால் கட்டாயம் கூடும்; கூடவேவேண்டும். நாம் சீக்கிரம் துணிகரமாக வேலைசெய்யாவிட்டால் நான் முன்னே கூறிய ஆபத்துகளனைத்தையும் அனுபவிக்க ஆயத்தமாக விருக்கவேண்டும். சீமாட்டியே! தங்கள் கட்சியைச் சேர்ந்த ஆட்கள் தங்களுக்கு உறுதியாகத்துணைசெய்ய ஆயத்தமாக விருக்கிருர்கள். முக்கிய இடையூருக விருக்கும் ஆளைத் தொலைத்து விடவேண்டும். அக்குழப்பத்தில் தங்கள் புத்திரர் சிம்மாதனத்தையும் செங்கோலையும் உறுதியாகக் கைப்பற்றவேண்டும். அவர் அதற்குப் பூரணமாகத் தகுதியுடையவரே" என்ருர்.

சீமாட்டி.—" ஆ, அம்முக்கியமான இடையூறு?" என்று தன் மனதிலுதித்த ஐயத்தால் தடுமாற்றத்தோடு கேட்டாள்.

பிரபு.—அதாவது அரசனை யொழித்து விடவேண்டும்; தாங்கள் கூறிய வஞ்சந்தீர்த்துக்கொள்ளும் விஷயம் கைகூடாவிட்டால்...

சீமாட்டி.—பிறகு மட்டும் தாங்கள் கூறியபடி யாவும் நடைபெறுமா?

பிரபு.—ஆகா தடையின்றி. அந்தவிவகாரம் நடக்கும் சமையம் முன்னடியே சிலர் அரசன் தம்பி புதல்வனருகில் இருக்கவேண்டும். அரசன் கொலையுண்டான் என்றதே எங்கும் பெருங் குழப்பமுண்டாய் விடும். அதேசமயம் அரசன் தம்பிபுதல்வனைப் பிடித்துக்கொண்டுபோய் ஓரிடத்தில் மறைத்துவைத்து விடவேண்டும். அதேசமயம் நமது கட்சியைச் சேர்ந்த மற்றபேர் தங்கள் புதல்வரைச் சிம்மாதனமேற்றி முடிசூட்டிவிடவேண்டும்.

சீமாட்டி.—ஆம் ஆம் அப்படிச்செய்தே தீரவேண்டும், அரசனை நினைக்கும்போதே என் மனம் தணலாய் எரிகிறது" என்றாள்.

பிரபு.—"அவன் தங்களுக்குச் செய்த கெடுதிகளையும் அவமானத்தையும் சகிக்கமுடியாமலே தங்களிடம் பக்தியுள்ள நாங்கள் முன்னமே கூடி தீர்க்காலோசனை செய்திருக்கிறோம். தங்களுக்காக எதையும் துணிந்து செய்யத் தீர்மானித்திருக்கிறோம்" என்றார்.

கடவுளுக்கிரண்டாவதாக மதிக்கவேண்டிய அரசனையே கொல்லத் தீர்மானித்த இந்த இரண்டு பரமசண்

டாளர்களும் ஒருவரை யொருவர் உற்று நோக்கிக்கொண் டார்கள்.

இதை வாசிக்கும் நேயர்களில் சிலர் "அய்யோ! அரசனை யெங்கேனும் கொல்லக் கருதுவார்களோ!" என்று திடுக்கிடுவீர்கள். அந்தோ நமது நண்பர்களே!. நமது நாட்டார்தான், அதிலும் ஹிந்துக்கள், இராஜக்கொலை என்ற வார்த்தையைக்கேட்டதே மனம்நடுங்கி உடல்துடித்து சிவசிவாவென்று செவியைப்பொத்திக் கொள்வார்கள். அவ்வார்த்தையைக் கேட்பதே மாபாதகம் என்பது இந்துக்கள் கொள்கை.இந்துக்களாகிய நாம் அரசனைக்கடவுளுக்கிரண்டாவதாக மதிக்கும் கொள்கை யுடையவர்கள். நம்முன்னோர்கள் போதனையே யவ்வாறு. முற்காலத்தில் மகா கொடிய அரசர்கள் அரசாண்டபோது நம்மவர்கள் "கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற்—கடும்புலி வாழுங் காடு நன்றே" என்பதை யொப்பக் கானகமேகிக் காலங் கழித்தனரே யன்றி கொடுங்கோன் மன்னர்க்கும் கொடுமை நினைத்தவர்களல்ல. ஆகையால் இந்துக்களைப் போல் இராஜபக்தியில் சிறந்தவர்கள் உலகில் வேறெந்த ஜாதியாரு மில்லையென்பது சத்தியம். ஆனல் மேல் நாடுகளிலே மேற்கண்டபாதகச்செயல் பலநாடுகளில் நடந்தேயிருக்கிறது. சமீபகாலத்தில் நடந்த ஐரோபா அநீதமகா யுத்தத்திலும் அதற்குத் திருட்டாந்தங்களைக் காணலாம்.

இந்த இரண்டு பாதகர்களும் மேற்கண்டவாறு கொலைக்குத்துணிந்த பார்வையோடு ஒருவரை யொருவர் நோக்கிக்கொண் டிருக்கையில், ஒரு வேலைக்காரன் வந்து சீமாட்டியை நோக்கி "எஜமாட்டியே! கர்னல் குமரவேலின் வேலையாளான அப்பாசாமி என்ற வாலிபன் ஏதோ அவசிய விஷயமாகத் தங்களைத்தரிசிக்க வந்திருக்கிறன்" என்றுன்.

சீமாட்டி யுடனே பிரபுவை நோக்கி "ஆ! அவனை யுடனே காணவேண்டும். என்ன சங்கதி கொண்டு வந்திருக்கிறானோ பார்ப்போம்" என்றாள். பிரபு "ஆம் ஆம், எதுவும் இரண்டிலொன்று இப்போது தீர்மானமாகத் தெரியவேண்டியதே" என்றார். சீமாட்டி "தாங்கள் இங்கேயே யிருங்கள். நான் துரிதமாகச் சங்கதி யறிந்து வருகிறேன்" என்று கூறிவிட்டு, வேலைக்காரனை நோக்கி "அவ்வாலிபனை என் சம்பாஷணை யறைக்கழைத்துவா!" என்றாள்.

---

## 41-வது அத்தியாயம்.

அப்பாசாமியும் குமுதவல்லிச் சீமாட்டியும்—தவறான அபிப்பிராயங்கள்—சீமாட்டியின் மாயஜால நடக்கை—கோடிய சதியாலோசனை—மதனம்பாள் சதிச்செயல்—ஞானப்பிரகாசம் குருவும் கர்னல் குமரவேலும் பாதாளச் சிறையிலடைக்கப்படல்—விசுவநாதன் தெய்வகதியாய்த் தப்பி வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் தீர்மானித்தல்—விசுவநாதன் அரசனது இரகசிய அறையில் சயனித்துக் கொண்டான்.

---

பஞ்சநாதம் பிரபுவைவிட்டுக் குமுதவல்லிச்சீமாட்டி தன் சம்பாஷணை யறைக்குச்சென்றபோது அப்பாசாமி முன்னாடியே அங்கு வந்து அந்த அறையின் சுவரில் மாட்டப்பட்டிருந்த சீமாட்டியின் படத்தை மிக்க ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தான். சீமாட்டி திடீலென்று வந்ததைக்கண்டதே அவன் திடுக்கிட்டுக் கலவரமடைந்து, அவள் முன் முழங்காற்படியிட்டுப் பணிந்தான். அவன் கலவரம் முதலியவற்றைக் கண்டும் சீமாட்டி உண்மையை

யறியாமல் "எழுந்திரு வாலிபனே! உன் அன்பு நிறைந்த பக்திக்காக நான் சந்தோஷமடைகிறேன். உன் எஜமான் எங்கே? என்ன சங்கதி கொண்டு வந்தாய்?" என்றாள்.

அப்பாசாமி:—அய்யோ சீமாட்டியே! என் எஜமான்....

சீமாட்டி:—உன் எஜமானுக்கென்ன? அவர் எங்கே?

அப்பாசாமி:—"அய்யோ! என் எஜமான் பருதிபுரத்திலுள்ள பாதாளச்சிறையில் அடைக்கப்பட்டார்" என்றான்.

சீமாட்டி இதைக்கேட்டதே பேரிடிவிழுந்தவள் போலானாள். ஏனெனில் அச்சிறைச்சாலையில் அடைக்கப் பட்டவர்களில் அனேகர் மரணபரியந்தம் வெளிவருவதில்லையென்று அவள் அறிவாள். அதன் பெயரைக் கேட்டாலே எவர்க்கும் ஆவியொடுங்கிவிடும். சீமாட்டி "பாதாளச் சிறையிலா? ஞானப்பிரகாசம் என்ற அக்குருவை உன் எஜமான் கண்டாரா?" என்றாள்.

அப்பாசாமி:—"அந்தோ! அக்குருவும் அதேசிறையிலடைக்கப்பட் டிருக்கிறார்" என்றான்.

இதைக்கேட்டதே குமுதவல்லியின் ஆவி யொடுங்கிவிட்டது. தன் எண்ணம் ஒருக்காலும் நிறைவேறா தென்றறிந்தாள். அதுமட்டுமல்ல, "இதற்குக்காரணம் மதனும்பாள் சீமாட்டியே. அவள் எப்படியோ நாம் செய்யும் முயற்சியை யறிந்து கொண்டு, பாஞ்சாலநாட்டு இராஜாங்கத்தில் அவளுக்கிருக்கும் செல்வாக்கால் பராங்குசம் பிள்ளை யென்ற மந்திரியின் மூலமாய் அவர்களிருவரையும் அப்பாதாளச் சிறையி லடைக்கும்படிசெய்து விட்டாள்" என்று அறிந்து கொண்டாள். இனி நாம் எத்தகைய முயற்சி செய்தாலும் பலிக்காது என்று அவள் மனதிற்பட்டது.

சீமாட்டியையுற்று நோக்கிக்கொண்டிருந்த அப்பாசாமி தன் காதற்கொதிப்பை யடக்க முடியாதவனாய், "சீமாட்டியே இவ்விஷயத்தில் நான் செய்யத்தக்க ஊழியம் ஏதேனுமிருந்தால் கட்டளை யிடும். எத்தகைய காரியமாயினும் சரி, எதுவாயினும் சரி. தங்கள் ஊழியத்தில் என் பிராணனையே தத்தம் பண்ண வேண்டுமாயினும் நான் ஆயத்தமா யிருக்கிறேன். நான் என் தேகத்தையும் உயிரையும் தங்கள் ஊழியத்திற்குத் தத்தம் செய்து தங்கள் அடிமையாக விருக்கிறேன்" என்று மறுபடி அவள் பாதங்களில் முழங்காலிட்டுப் பணிந்தான்.

அவன் உற்சாகத்தோடும் ஆத்திரத்தோடும் கூறிய மாதிரியால் சீமாட்டியின் மனதில் உண்மை புலப்பட்டது. அவள் உடனே வெறுப்போடு கேலியாக நகைக்க வாய்திறந்தாள். ஆனால் அதே க்ஷணமிடம் அவள் மனதில் ஒரு யோசனை யுதித்தது. உடனே தன் உணர்ச்சிகளைத்தும் அடக்கிக்கொண்டு அவனை எழுந்திருக்கச்செய்து அவன் முகத்தை யுற்று நோக்கி "வாலிபனே! நீ என் மேல் காதல்கொண் டிருக்கிறாய்" என்றாள்.

இம்மொழிகளை யவள் கூறியதனால் தனது காதலை யவள் ஏற்றுக்கொண்டாளென்று அவ்வாலிபன் கருதிக்கொண்டான். பாபம்! உலக அனுபவம் அறியாதவாலிபன். அத்தகைய துஷ்டமாதரின் நயவஞ்சகச்செயல்களைச்சற்றும் அறியாதவன். ஆகையால் ஆத்திரத்தோடு தன் காதல் அளவுகடந்ததென்று கூறிக்கொண்டே மறுபடி யவள் பாதங்களிற் பணிந்தான். சகலமாயஜாலமும் கற்ற அம்மாது தானும் அவன் மேல் காதல்கொண் டிருப்பதாகவும், அத்தகைய அழகிய வாலிபன் தன்மேற் காதல் கொள்வதைத் தான் கௌரவமாகவே கருதுவதாகவும்,

அவன் நம்பும்படி செய்து பிறகு அவனை நோக்கி, "ஆ! உன் காதலை நிரூபிப்பதற்காக நீயொரு காரியம் செய்ய வேண்டுமென்று நான் கூறினலோ?" என்ருள்.

காதல் என்ற கொடிய விஷம் தலைக்கேறியிருக்கும் அவ்வாலிபன் அச்சமயம் அவள் தீயில் குதிக்கச்சொல்லினும் அவ்வாறே செய்யச்சித்தமான மன நிலைமையுடையவனாக இருக்கிருன். ஆகையால் "ஆ! நீங்கள் கூறவேண்டியதுதான் தடை, அது எக்காரியமாயினும் செய்வேன்" என்ருன். சீமாட்டி இவ்வாறு கேட்டுக்கொண்டே போய்க் கடைசியில் "கொலையாயினும்?" என்ருள். வாலிபன் "ஆகா, தங்களுக்கு அதனல் நன்மையுண்டாவதாயின் நூறு கொலைகளாயினும் சரி" என்ருன்.

சீமாட்டி "ஆ! உன் காதலால் நான் மிக்க சந்தோஷமடைகிறேன். ஒருபோதும் எந்த ஸ்திரீயும் எந்தப்புருடன் மேலும் காட்டாத அத்தகைய காதல் உன்மேல் காட்டுவேன்" என்பது முதலிய நயவஞ்சகவார்த்தைகளைக்கூறியபின் "ஆ! நான் துயர்க்கடலில் ஆழ்ந்திருக்கிறேன்" என்ருள்.

அதைக்கேட்ட வாலிபன் மனந்தாளாதவனுகி "தாங்களா?" என்றதே, சீமாட்டி "ஆம். உனக்கு விளங்கவில்லையா! அரசன் என்னைத் தன் சமுகத்தினின்று விலக்கிவிட்டான். என் நண்பரிலொருவராகிய உன் எஜமானரைச் சிறையிலிருந்து மீட்டு விட்டதால் அரசன் எனக்கு மிக்க அவமான முண்டாகும் வண்ணம் செய்து என்னை அரண்மனைக்குள் விடலாகாதென்று கட்டளையிட் டிருக்கிருன். இப்போது நீ கொண்டு வந்த சமாசாரம் துயரத்தை யதிகமாக்கிவிட்டது. ஆ! உன் எஜமானுக்கு நேர்ந்திருக்கும் ஆபத்து மகா கொடியது. அது யாரால் நேர்ந்ததென்

பதை நான் அறிவேன். என் கொடியவிரோதி...'' என்பதற்குள்,

அப்பாசாமி:—''சீமாட்டியே! என்னுலாகவேண்டிய காரியம் எதுவாக விருந்தாலும் சரி. இப்போதே செய்யச் சித்தமாக விருக்கிறேன். தங்களுக்கு விரோதியாக விருக்கும் ஆள் யார் என்பதை மட்டும் கூறிவிடும். அவர்கள் ஆயுள் முடிந்ததென்றே கருதுங்கள்'' என்ருன்.

சீமாட்டி:—''ஆ! யார் ஒழிந்தால் என் துன்பம் யாவும் அடியோடு நீங்கி நான் அரசனுக்கு இரண்டாவதான செல்வாக்கு பெறுவேனே, அந்த ஆள் யாவர்க்கும் உயர்ந்த பதவியிலிருப்பவன்'' என்ருள்.

வாலிபன்:—அவன் எத்தகைய பதவியிலிருந்தாலும் சரி; அரசனே யாயினும் சரி, அவன் மடிந்தவனே.

சீமாட்டி:—அரசனுகவே யிருந்தாலோ?

வாலிபன்:—''அவசியமில்லை. தங்களுக்கு நன்மை யுண்டாவதாயின் அரசன் காலம் நெருங்கிவிட்டதென்றே நம்புங்கள். அது சத்தியம்'' என்ருன்.

அதைக்கேட்டதே சீமாட்டி ''இரு இரு, இரண்டொரு நிமிடங்களில் வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டுச் சமயலறைக்குச் சென்று சமையற்காரனை யழைத்து, ''நமது நண்பராகிய கர்னல் குமரவேலுடைய வேலையாளான அப்பாசாமி என்றவன் கடினமான பிரயாணம் செய்து நமக்குச் சமாசாரம் கொண்டுவந் திருக்கிருன். அவனுக்கு உடனே நம்மிடமிருக்கும் ஆகாரவகைகளில் உயர்ந்த ஆகாரமும் உயர்தரமான ஒயினும் கொண்டுபோய் வட்டித்து அவனை யுபசாரத்தோ டருந்தச்செய். சீக்கிரம்'' என்று கட்டளை யிட்டுவிட்டுப் பஞ்சநாதம் பிரபு

விடம் சென்றாள். இவள் முகத்தைக்கண்டு பிரபு ஒன்றும் அறிந்து கொள்ளக்கூடவில்லை. ஆகையால் அவளை நோக்கி "என்ன சங்கதி கொண்டு வந்தாள்? கர்னல் குமரவேல் எங்கே யிருக்கிறான்?" என்றார்.

சீமாட்டி "கர்னல் குமரவேலும் ஞானப்பிரகாசம் என்ற குருவும், இருவரும் இப்போது பருதிபுரப் பாதாளச் சிறையிலிருக்கிறார்கள்" என்றாள்.

பிரபு திடுக்கிட்டு முகம் வெளுத்து "தாங்கள் கூறுவது உண்மைதானே. அப்படியிருந்தால் அதுகேட்போர் நெஞ்சம் நடுங்கத்தக்க பெரிய பயங்கரமான விஷயமாயிற்றே. தங்கள் வதனத்தில் அதற்குத் தகுதியான குறியில்லையே" என்றார்.

சீமாட்டி.-"என்! இது தவறினால் தாங்கள் வேறொரு விஷயம் ஏற்பாடு செய்திருக்கிறீர்களல்லவா. அரசனையொழித்து விட்டு என் புத்திரனைச் சிம்மாதனத்திலமர்த்தி விடுவது என்ற விஷயம்..." என்றாள்.

பிரபு.—இப்போதேனும் அப்படிச் செய்யவேண்டியது அவசியமே யென்று தங்கள் மனதிற்குத் தோன்றுகிறதா?

சீமாட்டி.—தடையின்றி. என் பகைவி தன் வேலையை யரைகுறையாகச் செய்வதாய்த் தோன்றவில்லை.

பிரபு.—ஆம். அது பாஞ்சால மந்திரி மூலமாக அவள் செய்த வேலையே. சந்தேகமேயில்லை. இனி ஒவ்வொரு விநாடியும் நம் மனைவர்க்கும் ஆபத்தே. இனி நாம் சும்மா இருக்கலாகாது. சீக்கிரத்தில் துணிகரமாய் நாம் யோசித்தபடி செய்யவேண்டியதே.

சீமாட்டி.—ஆம். அதற்குத் தகுதியான ஆள்வேண்டும் சமையம் கிடைக்கவேண்டும் அல்லவா?

பிரபு.—ஆளைக்கண்டு பிடிப்பதுதான் கஷ்டம். ஏனெனில் அவன் அந்த வேலையைச் செய்யத்தக்க தைரியமும் துணிகரமும் உள்ளவனாக விருப்பதோடு, நம்மைக் காட்டிக் கொடாத அவ்வளவு நம்பிக்கை யுடையவனாக விருக்கவேண்டும்.

சீமாட்டி.—“அப்படியாயின் அக்கஷ்டம் நீங்கிவிட்டது. அதற்குத் தகுதியான ஆளைக் கண்டுபிடித்துவிட்டேன்” என்றதே.

பிரபு மிக்க வியப்படைந்து “என்ன? என்ன? எங்கே? யார்?” என்றார்.

சீமாட்டி “பிரபுவே! இப்போது நாம் சிந்திக்கும் விஷயம் அபாரமானதா யிராவிட்டால் பக்கம் வெடிக்கும் படியாக நகைப்பேன். மிக்க அதிசயமும் வேடிக்கையுமான ஒரு நாடகம் இப்போது நடந்தது. அதாவது கர்னல் குமரவேலின் ஆளான இருபதுவய தாகாத அப்பாசாமி யென்ற சிறுவன் என்மேல் அளவு கடந்த காதல் கொண் டிருக்கிறான்” என்றாள்.

பிரபு.—இதில் அதிசயம் ஒன்றுமில்லை. ஆனால் கொஞ்சம் முட்டாள் தனமும் துணிகரமும் இருக்கின்றன. தாங்கள் என்ன செய்தீர்கள்?

சீமாட்டி.—“நான் வெறுப்போடு கலகலவென்று நகைத்துவிடவே யிருந்தேன். ஆனால் அதற்குள் சட்டென்று என் மனதில் ஒரு யோசனை யுதித்தது. இவனை நமது காரியத்தை முடிப்பதற்குத் தக்க கருவியாக்கிக் கொள்ளலாம் என்று எனக்குப்புலப்பட்டது” என்று கூறிப் பிறகு தானும் அவன் மேல் காதல் கொண்டிருப்பதுபோல் அபிநயம் செய்ததும், நயவஞ்சகமாய்ப் பேசிக் கொலைசெய்வதற்குத்

துணிந்து ஆயத்தமாக விருக்கும்படி அவனே வசப் படுத்தி யிருப்பதையும் யாவும் விவரமாகக் கூறினள்.

பிரபு.—இது மிக்க நல்ல சமாசாரமே. அவன் துணிகர மாய்ச் செய்வானு?

சீமாட்டி.—ஆகா, தடையின்றி செய்வான். அதை நன்கு யறிந்து கொண்டேன். அந்த முட்டாள் பையன் நான் கூறியவற்றை யெல்லாம் உண்மை யென்றே நம்பிக்கொண் டிருக்கிறுன். இப்போது எதைச் செய்யவும் பின்னிடையான்.

பிரபு.—அப்படியாயின் அவனுடை மனக்கொதிப்பும் காதல் வெறியும் கொஞ்சமேனும் தணிய விட லாகாது. வேலே முடியுமட்டும் அவனே வெளியில் விட லாகாது. ஆலசியமின்றி முடித்துவிட வேண்டும். இன்றே செய்துவிட வேண்டும்.

சீமாட்டி.—தக்க சமயம் வாய்க்கவேண்டும். இவன் இர கசியமாக அரண்மனேக்குள் செல்லவேண்டும். ஒரு வர் கண்ணிலும் புலப்படலாகாது.

பிரபு.—ஆ! இந்த இரவே நல்ல சமயம். இன்று அரசன் தன் நெருங்கிய நண்பர்களுக்கு விருந்தளிக்கப் போகிறுன். ஏழெட்டு பேரே செல்வார்கள். அரசன் கொஞ்சம் அதிகமாகக் குடித்தபோது போஜன அறைக்கு அருகிலிருக்கும் தன் இரகசிய அறைக் குச்சென்று, அங்குள்ள மஞ்சத்தின்மேல் ஒரு மணி நேரம் நித்திரை செய்து விட்டுப் பிறகு மறுபடி தன் நண்பர்களிடம் வருவான். அச்சமயத்தில் அவன் உபயோகத்திற்கென்றே அங்கு ஒரு முகம்மல் போர்வை யெப்போதும் ஆயத்தமாக வைக்கப்பட் டிருக்கிறது. நான் சில சந்தர்ப்பங்களில் அரசனு

டைய படுக்கை யறைக்காரியஸ்தனுக விருந்தபோது யிவையாவு மூணர்ந்தேன். ஆ! அப்போது அரசன் அறைகளுக்குச் செல்லும் இரகசிய வழியின் திறவு கோல் ஒன்று வழக்கப்படி என்னிடம் கொடுக்கப் பட்டிருந்தது. நான் வேலையிலிருந்து விலக்கப்பட்ட போது அத்திறவுகோலை என்னிடமிருந்து வாங்கிக் கொள்ள மறந்துவிட்டார்கள். அது இப்போது என் னிடமே யிருக்கிறது. நான் உடனே யதையும்மிடம் அனுப்பிவிடுகிறேன். அதோடு அவ்வாலிபன் செல்ல வேண்டிய சமயம், வழி, முதலிய குறிப்புகளை யெல் லாம் ஒரு கடிதத்தில் எழுதியனுப்புகிறேன். தாங்கள் அதன்படி யவனுக்கு நன்ருய்ப் போதித்து அனுப் புங்கள். இதற்கிடையில் நான் நமது கட்சியாரில் ஒவ்வொரு வரையும் கண்டு, சமயத்தில் சிலர் அரசன் தம்பி புத்திரனைப் பிடித்துக்கொள்ள ஆயத்தமாக விருக்கவும், சிலர் உடனே தங்கள் புத்திரரைச் சிம் மாதனத்தி லமர்த்த அரண்மனைக்குச் சமீபத்தில் ஆயத்தமாக விருக்கவும் ஏற்பாடு செய்து விடுகி றேன். நான் பின் கூறிய கூட்டத்திலிருப்பேன். யாவும் மிக்க ஜாக்கிரதையோடு செய்யப்படவேண் டும். கொலைக்கும் நமக்கும் சம்பந்தமிருப்பதாக எள்ளளவு சந்தேகத்திற்குக்கூட இடமிருக்கலாகாது. இரண்டிடங்களில் அதேசமயத்தில் நமது கட்சியார் கூட்டமாகக் கூடியிருந்ததும் தற்செயலாய்ச் சம்ப வித்ததாகவே தோன்றவேண்டும். இன்னும் நான் கூறவேண்டிய தொன்றுமில்லை. தாங்கள் கூறவேண் டியதேதேனு முண்டோ?" என்றுன்.

சீமாட்டி.—"ஒன்றுமேயில்லை. தாங்கள் சென்று சாவியை யும் குறிப்பையும் சீக்கிரம் அனுப்புங்கள். இவ்

வாலிபன் விஷயம் நான் பார்த்துக் கொள்கிறேன். அவ்விஷயத்தில் தாங்கள் கொஞ்சமும் கலவரங் கொள்ளவேண்டாம். என் புத்திரன்…" என்றதே,

பிரபு.—" தங்கள் புத்திரனுக்கு நாம் அக்கொலையில் சம்பந்தப்பட்டோம் என்பதே தெரியலாகாது. சங்கதி தங்களுக் கெட்டினும் நான் வருமட்டும் தாங்கள் தங்கள் புத்திரர்க்கு ஒன்றும் அறிவிக்கலாகாது. அரசன் தன் தந்தையென்பதை யவன் அறிந்திருக்கிறான் என்றவிஷயம் தங்கள் கவனத்திலிருக்கட்டும். இன்றேல் பெருமோசமாய் முடியும். இனி நான் விடை பெற்றுக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டு உடனே அங்கிருந்து புறப்பட்டார்.

* * * * *

நேயர்களே! விஸ்வநாதன் பரிதிபுரத்தில் போலீஸ் பிரதம அதிகாரியைக் கண்டு பேசிவிட்டு அங்கிருந்து ஞானப்பிரகாசம்குரு இருக்கும் ஹோட்டலுக்குத் திரும்பினான் என்று கூறினேமல்லவா. அவன் கடைவீதிகளின் வழியே வந்துகொண் டிருக்கும்போது, கலையனூரில் தன்னிடம் மிக்க சிநேகனாக விருந்த ஒருவனை வழியில் சந்தித்தான். இருவரும் சற்று நேரம் பேசியபின் சந்தோஷமாய்ச் சற்று காலங்கழிக்கலாமென்று ஒரு ஹோட்டலில் பிரவேசித்து ஒரு புட்டி ஒயினும் சில பலகாரங்களும் வட்டிக்கும்படி கட்டளையிட்டார்கள். இருவரும் சுமார் ஒரு மணி நேரம் அங்கு வேடிக்கையாகக் காலங்கழித்தபின் விசுவநாதன் தான் தங்கியிருக்கும் ஹோட்டலுக்குத் திரும்பினான். அந்த நண்பனைச் சந்தியாதிருப்பானேல் கர்னல் குமரவேலும் குருவும் சம்பாஷித்துக்கொண் டிருந்தபோதே அங்கு வந்திருப்பான்.

அவன் ஹோட்டலுக்குள் நுழைந்ததும் நடந்த சங்

கதியைக் கேள்விப்பட்டு மிக்க வியப்பும் கலக்கமுமடைந்தான். உடனே ஹோட்டல் முதலாளியிடம் சென்று "என்னத்திற்காக அவர்களைப்பிடித்துச் சென்றார்கள்? பெயர்களைக் கேட்டார்களா!" என்று யாவும் விவரமாகக் கேட்டான். ஹோட்டல்காரன் கூறிய அங்க அடையாளங்களாலும் பெயராலும் குருவிடம் பேசிக்கொண்டிருந்தவன் கர்னல் குமரவேல் என்பதை யுணர்ந்தான். போலீஸார் பெயர் முதலியவொன்றுமே கேட்காமல் பிடித்துக்கொண்டுபோன விவரத்தைக்கேட்டதும், முதலில் அவன் மனதில் ஒரு பெரிய சந்தேகம்தோன்றி உடனே அது உண்மையே யென்று விளங்கிவிட்டது. போலீஸார் தன்னையும் குருவையுமே பிடித்துப்போக வந்தார்களென்றும் கர்னல் தற்செயலாய் அங்கு வந்து சிக்கிக்கொண்டான் என்றும், இது மதனாம்பாள் சீமாட்டி செய்த படுமோசமே என்றும் உணர்ந்தான்.

ஆனல் இவ்வாறு தவறு நேர்ந்ததே தான் தப்பியதற்குக் காரணம் என்றுணர்ந்து "தப்பினது தம்பிரான் புண்ணியம், தவறான ஆளைப் பிடித்து வந்ததை யுணர்ந்ததே போலீஸார் நம்மைத் தேடுவார்கள். அதனல் நாம் ஆலசியம் செய்யாமல் இதை விட்டு ஓடவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டு ஹோட்டல்காரனுக்குத் தானளிக்கவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு உடனே பருதிபுரத்தைவிட்டுப் புறப்பட்டான். மதனாம்பாள் சீமாட்டி கூறியபடி, தான் சத்தியமாய் நடந்துகொண்டிருக்க, அவள் தனக்குச் செய்தத் துரோகம் அவன் மனதில் அதிக கோபத்தை யுண்டாக்கியது. போலீஸ் அதிகாரி தன்னிடம் மிக்க மரியாதையாகவும் புகழ்ச்சியாகவும் பேசியகாரணம் இதற்குத்தான் என்று அவன் மனதிற் புலப்பட்டது.

எவ்வாற்றானும் மதனம்பாள்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று ஆலோசித்தான். கடைசியில் ஒரு யோசனை யுதித்தது. அதனால் வஞ்சம் தீர்த்துக்கொள்வ தோடு பொருளும் கிடைக்கும் என்று அவன் மனதிற் பட்டது. அதாவது "மதனம்பாள் சீமாட்டி குருவுக்கு மாத மாதம் பணம் அளிப்பதோடு, இப்போது அவனிடமுள்ள இரகசியத்தைக் கர்னல்குமரவேல் அறிந்துகொள்ள முயல்கிறான் என்றதைக்கேட்டதே, அவனை மரணபரியந்தம் பாதாளச்சிறையிலடைக்கும்படி செய்து விட்டதோடு, இச்சங்கதி யடியோடு மறைந்துவிட வேண்டுமென்று நம்மையும் கூட அடைத்துவிட ஏற்பாடு செய்ததைக்கருதும் போது, அந்த இரகசியம் மிக்க பயங்கரமானதாகவே யிருக்கவேண்டும். அரசன் தன் காதலிகளைப்பற்றிய விஷயங்கள், மிக்க புராதீனமானவைகளாக விருப்பினும், அவற்றைப்பற்றி யறிய மிக்க சிரத்தை யெடுத்துக்கொள்வான்" என்று விஸ்வநாதன் அறிவான். ஆகையால் "நாம்போய் நடந்த சங்கதிக்களைக்கூறி மதனம்பாள் சீமாட்டியின் பூர்வசரித்திரத்தை யறியும் மார்க்கம் இருக்கிறதென்றும் அது உண்மையென அறிந்த பிறகே எனக்குப் பரிசளியுங்கள் என்றும் கூறி அரசனிடம் ஏற்பாடு செய்துகொள்ளலாம்" என்று தனக்குள் தீர்மானித்து கொண்டு கலேயனூர் வந்ததும் தட்சணம் ஒரு கப்பலிலேறி இலவணபுரிக்குப் புறப் பட்டான்.

முன் கூறிய சம்பவங்கள் குமுதவல்லிச்சீமாட்டியின் மாளிகையில் நடக்கும் தினம், மாலை சுமார் ஆறுமணிக்கு விசுவநாதன் இலவணபுரி சேர்ந்து அங்குள்ள ஹோட்டலில் தங்கினான். அங்கு தங்கியிருந்து சற்று இளைப்பாறிய பின் கொஞ்சம் ஆகாரமுண்டு நல்ல நாணயமான உடை

யணிந்து சரியாக எட்டு மணிக்குப் புறப்பட்டு அரண் மனையை நோக்கிச் சென்றான்.

விசுவநாதன் அரண்மனைவாயிலில் சென்று அங்கிருந்த காவலனிடம் தான் ஒரு முக்கிய விஷயமாக அரசனைக் காண வேண்டுமென் றியம்பியதே, அக்காவலன் அவனை யுள்ளே யழைத்துச்சென்று ஒரு அறையில் உட்கார வைத்து விட்டு "தாங்கள் இங்கிருங்கள்; அரசரிடமிருக்கும் ஆள் வருவான், அவனிடம் சங்கதி கூறும்" என்று கூறிச் சென்றான். அப்போது மிக்க குளிர்காலமாதலால் விசுவ நாதன் மேலுக்கொரு போர்வை யணிந்திருந்தும் குளி ரால் வருந்த வேண்டியிருந்தது. பத்து நிமிடங்கள் கழிந்த பின் மிக்க நாணயமான வேலையாள் ஒருவன் வந்து விஸ்வ நாதனை நோக்கி "அரசர் இப்போது தமது நெருங்கிய நண்பர்களோடு விருந்துண்டு கேளிக்கையா யிருக்கிறார். இப்போது கண்டுபேச அனுகூலப்படாது. இன்னம் இரண் டொரு மணிநேரம் கழியவேண்டும்" என்றான். அதன் மேல் விசுவநாதன் தான் கொண்டுவந் திருக்கும் சமா சாரம் மிக்க முக்கியமானதென்று அவன் மனதிற்குப் படும் படி கூறியபோது அவன் "இரு எதற்கும் அரசர் என்ன கட்டளை யிடுகிறாரோ அறிந்து வருகிறேன்" என்று கூறி விட்டுச்சென்றான்.

விசுவநாதன் குளிரோடு அந்த அறையில் உட்கார்ந் திருந்தான். அரசனுடைய ஆள் சுமார் கால்மணி கழித்து வந்து "இங்குவா" என்று விசுவநாதனை வேறொரு அறைக்கு அழைத்துச்சென்றான். அந்த அறை யரசனு டைய இரகசிய அறை. வேலைக்காரன் விசுவநாதனை யங்கு உட்கார வைத்து விட்டு, "நீ யிங்கேயே யிரு. அரசர் வருவார்" என்று கூறி விட்டுச்சென்றான்.

அந்த அறையில் நெகிடித்தீ போடப்பட்டிருந்தது. ஆனால் அச்சமயம் அது அணைந்துபோ யிருந்தது. என்ன காரணத்தாலோ வேலைக்காரன் அதைக் கவனிக்கவில்லை. அந்த அறையில் ஒரு வெள்ளித்தீபம் எரிந்து கொண்டிருந்தது. விசுவநாதனுக்குக் குளிர் அதிகமாக விருந்தது. ஏனெனில் அருகில் இருக்கும் ஆற்றின்மேல் வீசிக் கொண்டு வரும் காற்று மிக்க நடுக்கத்தை யுண்டாக்கியது. ஆகையால் கஷ்டத்தோடு சமாளித்துக்கொண்டிருந்தான். ஆயினும் அவன் நெடுநேரம் காக்கவேண்டி யிருக்கவில்லை. சுமார் கால்மணி நேரத்திற்குள் அரசன் அந்த அறைக்குள் வந்தான்.

அச்சமயம் அரசன் தள்ளாடிக்கொண்டுவரும் நிலைமையைப்பார்த்தால் அவன் அளவுமீறிக்குடித்து வெறியேறி யிருக்கிறான் என்று எவனும் அறிந்து கொள்ளலாகும். அவன் அறையின் மையத்தை நோக்கி வரும் போது அவன் கால்கள் தள்ளாடின. சற்று தவறினால் அடியற்ற மரம்போல் கீழே வீழ்ந்து விடக்கூடிய நிலைமையிலிருக்கிறான். ஆயினும் பிரத்தியட்சத்தில் நடக்கும் விஷயங்களை யறிந்து கொள்ளக்கூடிய நிலைமையிலிருக்கிறான். அப்படி யிருந்தும் ஏதோ குடிக்காதவன் போல் தன்னால் கூடியவரையில் அபிநயித்துக்கொண்டு "நீ என்ன காரியமாக வந்தாய்?" என்றான்.

விசுவநாதன்:—"நான் மகாராஜாவுக்குக் கூறப்போகும் விஷயம் சற்று சந்தோஷக்குறைவானதாயினும் அதைக்கூற வேண்டியது என் கடமையாக விருக்கிறது. நான் இதற்காகப் பருதிபுரத்திலிருந்து வந்தேன்" என்றான்.

அரசன்:—ஏ...ஏ...நீ எங்கே...எங்கிருந்து வந்ததைப்

பற்றி. சட்...என்ன அவசியம்? என்ன சமாசாரம்... அது...அதைக்கூறு'' என்று வாய்குழறிக்கொண்டே கூறினன்.

விசுவநாதன்:—''மகாராஜா! நான் கூறப்போகும் சங்கதி மிக்க உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர்களும் தங்கள் பூரண அன்பைப்பெற்றவர்களுமாகிய ஒரு சீமாட்டியின் பூர்வசரித்திரத்தைப்பற்றியது'' என்ருன்.

அரசன் இவன் தன் காதலிகளில் ஒருத்தியைப் பற்றியேதோ விசேஷ சமாசாரம் கொண்டுவந் திருக்கிருன் என்று மட்டும் தெரிந்து கொண்டான். ஆயினும் இப்போது தானிருக்கும் நிலைமையில் அதைப்பற்றி விவரமாகக்கேட்டறிய முடியாதென்றும் உணர்ந்தான். ஆதலின், ''ஏ! ஏ. நீ கொஞ்சம் அதிகம் குடித்து விட்டிருக்கிருய். இல்லை யில்லை. நான்...நான் குடித்து விட்டிருக்கிறேன். சற்று நேரம் உறங்கு. உன்மயக்கம் தெளியட்டும்...ஆம். ஆம்...உன் பெயர்...விசுவ...விசுவகர்மா... எதுவோ—நீ இங்கு சௌக்கியமாக விரு. நான் சீக்கிரம் வருகிறேன். ஆம். நிம்மதியாக இரு... போய் விடாதே. நான் வருமட்டு மிரு. அச்சம் வேண்டாம், இம்மஞ்சத்தின் மேல் சயனித்திக்கொள்'' என்று கூறி விட்டு அரசன் மிக்க கஷ்டத்தோடு வெளியிற் சென்ருன்.

விசுவநாதன் தான் கூறிய இரண்டொரு வார்த்தைகளாலேயே அரசன் ஏதோ சங்கதி யிருக்கிறதென்றுணர்ந்து அதை யறிய ஆவல்கொண் டிருக்கிருன் என்று உள்ளத்தில் சந்தோஷமடைந்தான். சற்று நேரம் உட்கார்ந்து பார்த்துக் கடைசியில் மஞ்சத்தில் சயனித்துக்கொண்டான். ஆனல் குளிர் அதிமாக விருக்கிறது. என்ன செய்வான். காலை மட்டுமாவது மூடிக்கொள்ளலாமென்று

துணிந்து மஞ்சத்தின்மேலிருக்கும் முகம்மல் போர்வையை யெடுத்து முழங்கால்வரை போர்த்துக்கொண்டான். அப்படியும் குளிர் அடங்கவில்லை. போர்வையை யின்னும் கொஞ்சம் மேலுக் கிழுத்துக்கொண்டான். இன்னும் மேல் பாகத்தில் குளிர் வருத்துகிறது. அப்படியே அப்போர்வையை யிழுத்து இழுத்துக் கடைசியில் தேக முழுமையும் முகம் முதற்கொண்டு பூரணமாக மூடிக் கொண்டு சுகமாகத் தூங்கத்தொடங்கினான்.

அரசன் அந்த அறையை விட்டுச்சென்று சுமார் ஒரு மணி நேரமாயிற்று. விசுவநாதன் சுகமாக நித்திரை செய்துக்கொண்டிருக்கிறான். அந்தோ தீவினைப்பயனை யார் அறிவார். அவன், நாம் இன்னும் சற்று நேரத்தில் அரசனுக்கு யாவும் கூறி நல்ல பரிசு வாகங்லாம் என்று நம்பியிருக்கிறான். ஆனால் அந்த நித்திரையிலிருந்து அவன் எழுந்திருக்கிறானு வென்பது என்ன நிச்சயம். ஆண்டவன் கட்டளையை யாரறிவார்.

---

## 42-வது அத்தியாயம்

அரண்மனையில் படுகொலை—நிரபராதியாகிய கர்னல் இரகுநாதர் கொலைக்குற்றத்திற்காக சிறையாக்கப்படல்—சதியாலோசனைக்காரருக் குண்டான குழப்பம்—அப்பாசாமியும் குமுதவல்லியும்--குமுதவல்லியின் கலக்கம்.

---

விசுவநாதன் அவ்வாறு நித்திரையிலிருக்கையில் அறையின் கதவு மெதுவாகத் திறக்கப்பட்டதும் கர்னல் குமரவேலின் வேலையாளான அப்பாசாமி என்ற வாலிபன் விகாரமான முகத்தோற்றத்தோடு அடிமே

லடிவைத்து அறைக்குள் சென்றான். அச்சமயம் தீபம் அணைந்து போகும் சமயத்திலிருந்ததால் மிக்க மங்கலாய் எரிந்துகொண் டிருந்தது. அப்பாசாமி அறையின் நாற்புறங்களையும் சுற்றி நோக்கியதும் மஞ்சத்தினருகில் சென்று படுத்திருக்கும் உருவத்தைக்கண்டு அரசனே என்று நம்பி அவன் இருதயத்தைக் குறிபார்த்து தன் வலது கரத்தில் பிடித்திருந்த ஈட்டியால் ஓங்கிக் குத்தி விட்டான். விசுவநாதன் மிகமெதுவாக ஆ என்றனும் சவமாய் விட்டான். அதே சமயம் அவன் தேகத்திற்குள் பிரகாசித்துக்கொண்டிருந்த ஆன்மாவாகிய தீபம் அதைவிட்டு நீங்கியது போல், அறையில் எரிந்துகொண் டிருந்த தீபமும் பட்டென் றணைந்துவிட்டது. அப்பாசாமி ஈட்டியை இறந்தவன் மார்பிலேயே விட்டுவிட்டுத் துரிதமாக அறையை விட்டு வெளிப்பட்டு, தான் வந்த இரகசியவழியாகவே அரண்மனையை விட்டு வெளிச் சென்றான்.

கால்மணி நேரங்கழித்து, சற்று நேரம் உறங்கிச் சற்று வெறி தணிந்த அரசன் அந்த அறைக்குள் வந்தான். எங்கும் இருளாகவே யிருக்கவே, ஓகோ அம்மனிதன் போய் விட்டான் போலும் என்று கருதினான். உடனே நான் வருமட்டும் இங்கேயே யிரு என்று தான் கூறியது நினைவிற்கு வரவே மெதுவாகச்சென்று மஞ்சத்தில் தடவிப்பார்த்து ஆள் இருப்பதை யறிந்து "ஆ! இப்பயல் நமது போர்வையைப் போர்த்துக்கொண்டு சுகமாக நித்திரை செய்கிறான்" என்று கூறிக்கொண்டே, அறையின் வெளியிற் தாழ்வாரத்திலிருந்த ஒரு தீபத்தைக் கரத்திலெடுத்துக்கொண்டு மஞ்சத்தின் அருகில் வந்து படுத்திருப்பவன் முகத்தின்மே லிருந்த போர்வையை நீக்கியதும் அவன் பிரேதமாக விருப்பதையும் அவன் மார்பில் ஒரு

ஈட்டி குத்தப்பட்டிருப்பதையும் கண்டு பிரமித்து நின்ருன். அரசன் குடித்தவெறி ஒருவாறு தெளிந்திருந்த போதிலும் இக்கோரக்காட்சியைக் கண்டதே கொஞ்ச நஞ்ச மிருந்த மயக்கமும் போய்ப் பூரணத்தெளிவடைந்து, உடனே காவலரை யழைத்து அரண்மனையின் வாயில்களை யெல்லாம் மூடி உள்ளிருந்து எவரும் வெளிப்போகாது செய்யும்படி கட்டளை யிடவேண்டும் என்று ஆத்திரத்தோடு அறையைவிட்டு இரண்டடி செல்லும்போது, சமீபத்திலுள்ள தாழ்வாரத்தில் நாலைந்து பேர் கோபத்தோடு சச்சரவிடுவது போன்ற ஒருவிதச்சத்தம் உண்டாவதைக் கேட்டு அங்கு சென்ருன்.

அங்கு உயரமும் கம்பீரமுமான ஒரு மனிதனை யரண்மனை வேலையாட்கள் பிடித்து இழுத்துவர முயல்வதையும் அம்மனிதன் அவர்கள் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள முயல்வதையும் கண்டான். அச்சமயம் அம்மனிதன் "சே மூடப்பயல்களே! என்னைத்தொடாமல் எட்ட நில்லுங்கள். என்னை என்ன கொலையாளி யென்று எண்ணினீர்கள்?" என்ருன். அவ்வார்த்தையைக்கேட்டதே, அரசன் "யார் கொலையாளி யென்பவன்—அவனை விடாமல் பிடித்துக் கொள்ளுங்கள். இங்கு கொலையே நடந்திருக்கிறது" என்ருன்.

வேலையாட்கள் "சரி, நாம் கொலையாளியைப்பிடித்துக் கொண்டோம்" என்று எண்ணிக்கொண்டு "ஆ!, கொலையா!" என்ருர்கள்.

அரசன்.—"ஆம். கொலையே. இவனைப்பத்திரமாகப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்றதே பிடிக்கப்பட்ட மனிதன் "நீ என்னதான் அரசனுனுலும் சீ! கொலையாளி என்று என்னைக்கூறினுல் நானல்ல நீயே கொலையாளி யென்பேன்" என்ருன்.

அரசன் "ஆ! கள்ளனே. என்னைக்கண்டதே அடடா இவன் சாகவில்லையே யென்று திடுக்கிட்டு விட்டாய். இவனை யெங்கே கண்டீர்கள்?" என்றான்.

வேலைக்காரர்:—'இவன் தாழ்வாரவழியே சந்தேகமான விதமாக மெதுவாய் வந்துகொண் டிருந்தான். நீ யாரென்று கேட்டதற்குப் பதில் கூற மறுத்து விட்டான்" என்றதே,

அம்மனிதன் "இது அடியோடு பொய். "நான் ஒருவரைக்கண்டு பேசவந்தேன். அவரைக்கண்டே தீர்வேன்" என்று கூறி யிருக்கிறேன்" என்றான். அரசன் "அட பொய்யனே! நீ செய்த கொலைபாதகத்தைப் பார்த்தால் தான் ஒப்புக்கொள்வாய்" என்று கூறித் தன் ஆட்களை விளித்து இவனை யிங்கு அழைத்து வாருங்கள் என்று தன் இரகசிய அறைக்குட்சென்று மஞ்சத்தின்மே லிருக்கும் சவத்தைக்காட்டினான்.

அம்மனிதன் அதைக்கண்டதும் "ஆகாயவாணி பூமி தேவி யறியக் கடவுளறிய நான் இக்கொலையைச் செய்யவில்லை. நான் இங்கு ஒருவரைக் காணவந்தேன்..." என்றதே,

அரசன் "என்னையே காணவந்தாய்" என்றான். அம்மனிதன் "ஆம் என் ஒளிக்கவேண்டும்? உன்னையே காண வந்தேன்" என்றதும், அரசன் "என்னைக்கொல்லவந்தாய் ஆனல் தவருய் அவனை நானென்றெண்ணிக்கொன்ருய்" என்றான்.

அம்மனிதன் கோபத்தோடு "மறுபடி கூறுகிறேன் நீயே கொலையாளி நானல்ல. நான் உன்னைக்காண வந்தேன். இந்தப்பக்கம் வந்து வழியறியாமல் தடமாடிக் கொண்டிருக்கையில் அந்தச் சிறு வழியின் கதவு திறந்திருந்தது. அவ்வழி வந்தேன். நான் தாழ்வாரத்தில்

வரும்போது எனக்கு வழி சரியாகத்தெரியாதலால் நிதானமாக வந்தேன். இவர்கள் பிடித்துக்கொண்டார்கள். இவ்வளவே சங்கதி. இவர்கள் சற்று நிதானமாகக்கேட்டிருந்தால் நான் யாரைக்காண வந்தேன் என்பதை விவரமாகக் கூறி யிருப்பேன்" என்முன்.

அரசன் "ஒகோ இந்தக்கதையால் பயனில்லை. காவலர்களை யழைத்து வாருங்கள்" என்ழுன்.

இதற்குள் ஒரு கொலை நடந்ததென்றும் ஒரு மனிதன் அரசனைக்கொல்லக்கருதித் தவமுக இன்னொருவனைக் கொன்று விட்டான் என்றும் சங்கதி அரண்மனை முழுதும் பரவிவிட்டது. மதனம்பாள் சீமாட்டி அலறிக்கொண்டு ஓடி வந்தாள். அரசன் "ஆ! நான் கடவுள் தயவால் தப்பித்துக்கொண்டேன். இதோ பார் நான் படுக்குமிடத்தில் படுத்திருந்த மனிதன் கொல்லப்பட்டிருக்கிறுன்" என்று கூறிக்கொண்டே அவளுக்குச் சவத்தைக்காட்டினன். அவன் முகத்தைக்கண்டதே அவள் திடுக்கிட்டு "அய்யோ இவனு?" என்முள். அரசன் இவனை யறிவாயோ என்றதற்கு "ஆம் ஒரு முறை பார்த்திருக்கிறேன். இவன் இங்கெப்படி வந்தான்?" என்முள்.

அரசன் "இவன் என்னிடம் எதோ சங்கதி கூற வந்தான். நான் சற்று நேரம் இங்கு தங்கியிரு நான் பிறகு வருகிறேன் என்று கூறிச்சென்றேன். நான் திரும்பி வந்து அச்சங்கதியைக் கேட்பதற்குள் அவன் கதி யிப்படி யாயிற்று" என்முன்.

மதனம்பாள் விசுவநாதன் தன் சதிச்செயலை யெப்படியோ அறிந்து தப்பித்துக்கொண்டு வந்து அரசனிடம் யாவும் கூறவந்தானென்றுணர்ந்து நேர்ந்த சங்கதிக்காக உள்ளத்தில் சந்தோஷ மடைந்து அரசனை நோக்கி "அங்

தோ! தாங்கள் தப்பியது தெய்வகருணையே. கொலை செய்தவன் யார்?'' என்றாள். அரசன் அவளைத்தாழ்வாரத் திற்கழைத்துச்சென்று இதோ இவன்தான் என்று அகப் பட்டுக்கொண்டிருக்கும் ஆளைக்காட்டினான்.

மதனம்பாள் சீமாட்டி அந்த ஆளைக் கண்டதும் மறு படி மிக்க வியப்படைந்து திடுக்கிட்டு "அய்யோ இதென்ன உண்மையா? கர்னல் இரகுநாதர்!'' என்றாள்.

இதைக்கேட்டதே அரசன் "ஆ! கர்னல் இரகு நாதர் சரி சரி. சந்தேகமேயில்லை. இவன் என்னைக் கொல்லவே வந்தான். இவனைப் பிடித்துக்கொண்டுபோய் நமது கோட்டைச்சிறைச்சாலையில் அடைத்துவையுங் கள்'' என்றான்.

கர்னல் இரகுநாதர்:—"சீமாட்டியே! யுத்தமுனையில் இக் கரத்தால் எத்தனையோ பேரைக் கொன்றிருக்கி றேன். ஆனால் இவ்வாறு கோழைத்தனமான கொலை நான் ஒருபோதும் செய்பவனல்ல'' என்றான்.

அரசன் "கொலையை மறைக்கப் பொய் கூறுகிறான். இவனை யொருவார்த்தையும் பேசவிடாமற் கொண்டு போங்கள்'' என்றான்.

கர்னல் இரகுநாதர் "அரசனே! இப்போது நான் உன்னிடம் சிக்கிக்கொண் டிருக்கிறேன். நீ எப்படி செய் தாலும் உடன்படவேண்டியதே. ஆனால் கடவுள் ஒருவரு ளர் என்பது உண்மையாயின் என்றைக்காயினும் என் நிர பாரத்தன்மை வெளிப்பட்டு உண்மைக்கொலையாளி இன் னவனென்று விளங்காமற் போகாது'' என்றார். அதற் குள் காவலர் அவரை அழைத்துச்சென்றார்கள்.

இப்போது வேறிடங்களில் நடக்கிற விஷயங்களைக் கவனிப்போம். குமுதவல்லிச் சீமாட்டியின் நண்பர்களில்

ஒருவராகிய ஹரிஹரம் பிரபுவின் மாளிகை இராஜமாளிகைக்குச்சமீபத்தில் இருக்கிறது. அரண்மனையில் மேற்கண்ட சம்பவம் நிகழும்போது இந்த மாளிகையில் கேளிக்கையாக விருந்து நடக்கிறது. பஞ்சநாதம் பிரபுவும் அவர் நண்பர்கள் ஐந்தாறு பேரும் முன் செய்த சதியாலோசனைப்படி அரசன் கொல்லப்பட்டதே குமுதவல்லிச் சீமாட்டியின் புத்திரனைச் சிம்மாதனத்திலேற்றுவிக்க ஆயத்தமாய் அங்கு கூட்டம் கூடியிருக்கிறார்கள். வெளித் தோற்றத்திற்கு தற்செயலாய் அங்கு கூடியிருப்பதாகத் தெரிவதற்காக அங்கு விருந்து வைத்துக்கொண்டார்கள்.

இவர்கள் பார்ப்போர்க்குச் சந்தோஷமாய்க்குடித்துக் கொண்டும் சம்பாஷித்துக்கொண்டு மிருப்பினும் அவர்கள் மனம் பெருந்துடிப்பி லிருக்கிறது. அவர்கள் எண்ணம் முழுமையும் அரண்மனையிலும், தாங்கள் கேட்க ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் பயங்கர சங்கதியின்மேலுமே யிருக்கிறது. எந்தசமயத்தில் என்ன சங்கதிவருமோ வென்று பெருந்திகிலோடிருக்கிறார்கள்.

இவ்வாறிருக்கையில் திடீலென்று ஒரு வேலைக்காரன் பயங்கரமான விகாரமடைந்த முகத்தோடும், மிக்க கலவரத்தோடும் அறைக்குள் ஓடிவந்து "பிரபுக்களே! எஜமான்களே! அரண்மனையில் பெரிய குழப்பம் கோரமான சம்பவம் நேர்ந்தது" என்றான்.

இதைக்கேட்டதே அனைவரும் "ஆ, ஆ! என்ன? என்ன சங்கதி?" என்று துள்ளியெழுந்தார்கள். அதற்குள் வேலைக்காரன் "அரண்மனையில் கொலை நடந்துவிட்டது. யாரோ ஒருவன் அரசனையே கொல்ல வந்தவன் தவறாக வேறு யாரோ புது மனிதன் ஒருவனைக் கொன்றுவிட்டான்" என்றான்.

இதைக் கேட்டதே அவர்களனைவரும் பேரிடி விழுந்தவர்கள்போல் பிரமித்துப் பெருந்திகிலடைந்து பயங்கரமான ஆவலோடு, "கொலையாளி! கொலையாளி! அகப்பட்டானா?" என்றார்கள்.

வேலையாள் "ஆம். கொலையாளி பிடிக்கப்பட்டான்" என்றான். இதைக்கேட்டதே அவர்கள் ஆவி சோர்ந்து விட்டது. தங்கள் பிராணனுக்கே தீங்குவந்ததென்று தீர்மானித்தார்கள். உடனே அவனை யரண்மனைக்குச் சென்று விபரம் அறிந்து வரும்படி துரத்தினார்கள். அவன் போய் துரிதமாகத் திரும்பிவந்து "கொலையாளி பெரிய கட்சியைச் சேர்ந்தவர்களில் ஒருவராகிய சர்னல் இரகுநாதர் என்பவராம்" என்றான்.

இதைக்கேட்டபோது இன்னும் அவர்கள் வியப்பும் கலவரமும் சொல்லத்தரமல்ல. விவகாரம் நடந்தது இன்னதென்று அவர்களுக்குச் சற்றும் விளங்கவில்லை. இங்கு இவ்வாறிருக்கக் குமுதவல்லிச் சீமாட்டியின் மாளிகையில் என்ன நடக்கிறதென்று பார்ப்போம். அம்மாது அன்று பகல் முழுமையும் அப்பாசாமியைத் தன் மாளிகை விட்டு வெளிச்செல்ல விடவேயில்லை. பிறகு என்ன நேரினும் நடந்த சங்கதிக்கும் தனக்கும் எள்ளளவு சம்பந்தமேனுமிருந்ததாகச் சந்தேகமே யுண்டாகலாகாதென்பது அவள் யோசனை. ஆகையால் இரவு எட்டு மணிவரை அப்பாசாமியை அவன் மன உற்சாகம் சற்றும் குறையாவண்ணம் தந்திரமாக வைத்துக்கொண்டிருந்து, பிறகு பஞ்சநாதம் பிரபு அனுப்பிய குறிப்பிலுள்ள விவரங்களனைத்தும் அவன் மனதில் நன்றாய்த் தரிக்கச் செய்து அரண்மனையின் இரகசியவழித் திறவுகோலையு மளித்து, தன் மாளிகையிலுள்ள ஒருவருக்கும் தெரியாமல் தானே யவனை

யழைத்துப் போய் தன் மாளிகைத்தோட்டச் சுவரிலிருக்கும் இரகசியவழியாய் வெளியனுப்பினாள்.

அப்பாசாமி சென்றபின் நாழிகை கழியக்கழிய குமுதவல்லியின் மனப்பதைப்பும் திகிலும் குழப்பமுமதிகமாய்விட்டது. போகப்போக ஒவ்வொரு நாழிகையும் ஒவ்வொருயுகமாக அவளுக்குத் தோன்றியது. அவன் உள்ளே நுழையும்போது யாரேனும் காவலர் பிடித்துக் கொள்வார்களோ என்ற பயம் ஒன்று. ஆனால் அதனால் காரியம் தாமதப்படுமேயன்றி ஆபத்து ஒன்றும்நேராது. ஏனெனில் எந்தக் காரணத்தாலேனும் காரியம்முடியுமுன் யாரிடமேனும் சிக்கினால் தான் அரசனைக்காண வந்ததாக கூறவேண்டுமென்றும், அரசன் கேட்டால் தன் எஜமானாகிய கர்னல் குமரவேல் பருதிபுரப்பாதாளச் சிறையில் சிக்கிக்கொண்டதைப்பற்றி கூறவந்ததாக இயம்பி அவரை மீட்கும்படி பிரார்த்திக்க வேண்டுமென்று அவனுக்குஉபதேசம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் சீமாட்டிக்கு அதைப்பற்றி அவ்வளவாகப் பயமில்லை. கொலை நடந்தபின் சிக்கிக்கொண்டு பயத்தால் எங்கே உண்மையைக் கூறித் தங்களைக் காட்டிக்கொடுத்து விடுவானோ என்பதே பெருந்திகிலாக விருந்தது. கடைசியில் ஒரு மணி நேரங் கழிந்ததும் அச்சீமாட்டி தன் மனவேதனையைப் பொறுக்கமுடியாமல் மெதுவாய்எழுந்து தோட்டத்திற்குச்சென்று அங்கிருந்த தாழ்வாரத்தில் உட்கார்ந்து அப்பாசாமியின் வரவை மிக்க மனத்துடிப்போடும் திகிலோடும் ஆவலோடும் எதிர் பார்த்துக்கொண் டிருந்தாள். கடைசியில் யாரோ இரகசியவழியாக வரும் சத்தம் கேட்டதும் திடுக்கிட்டு அத்திக்கை நோக்கினாள்.

அப்பாசாமி முகத்தை மூடிக்கொண்டு படுத்திருந்த ஆள் அரசனே என்று நம்பிக்கொண்டான். அந்த அறை

யரசனுடைய இரகசிய அறையென்றும், அரசன் சற்று அதிகமாகக் குடித்துவிட்ட சமயங்களில் அங்குவந்து அங்கிருக்கும் முகம்மல் போர்வையைப் போர்த்துக்கொண்டு ஒரு மணி நேரம் உறங்குவது வழக்கம் என்றும், அவனுக்குக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் அங்குபடுத்திருப்பவன் அரசனே என்று கருதி தன் ஈட்டியால் அவன் இருதயத்தை நோக்கிக் குத்திவிட்டான்.

குத்தியவுடனே தான் செய்த குற்றத்தின் அளவு இத்தகையதென்று அவன் மனதிற்பட்டதும், அவன் மனதில் திகிலும் கலவரமும் உண்டாயின. அதனல் அவன் உடனே அங்கிருந்து புறப்பட்டுக் கனவில் நடப்பவன் போல வந்தவழியே திரும்பி வரும்போது இரகசியவழியிலிருந்த கதவை மூடிப்பூட்டாமலே விட்டுவிட்டு அரண்மனையிலிருந்து வெளிப்பட்டான். அங்கிருந்து வரும்போது குமுதவல்லிச் சீமாட்டியின் நினைப்பு வரவே அவன் மனதில் ஒருவிதச் சந்தோஷமுண்டாயிற்று. காதல் சுடர் விட்டெரியத் தொடங்கியது. முன்னமே அவள் காதலையடியோடு தன் வசமாக்கிக் கொண்டதாக அவன் மனம் தீர்மானித்துக்கொண்டது. ஆயினும் சீமாட்டியின் எதிரில் செல்லும்போது அவன் முகம் வெளுத்துப் பயங்கரவிகாரம் பொருந்தியதாக விருந்தது.

குமுதவல்லி அவன் பார்வையாலேயே அவன் கொலை செய்து விட்டான் என்று உணர்ந்தாள். உடனே அவன் கரத்தைப்பற்றி அவனை யறைக்குக்குள் அழைத்துக் கொண்டுபோய்,

"அப்பாசாமி! காரியத்தை முடித்துவிட்டாயா?" என்ருள்.

அப்பாசாமி.—"சீமாட்டியே! ஆம். உன் பகைவனை அரசன் இவ்வுலகை விட்டு ஒழிக்கப்பட்டான்" என்ருன்.

அந்த நயவஞ்சமாது அவனை யாலிங்கனம் செய்து கொண்டு "ஆ! நீ யொருவர் கண்ணுக்கும் புலப்படாமல் வந்து விட்டாயல்லவா?" என்றாள்.

வாலிபன்.—ஆம். ஒருவரும் என்னைப் பார்க்கவில்லை.

சீமாட்டி.—உன் காரியம் பூரணமாய் நிறைவேறி விட்டதென்று நிச்சயமாகத் தெரியுமா? சந்தேகம் கொஞ்சமுமில்லையே?

வாலிபன்.—"எள்ளளவு சந்தேகமுமில்லை. அவன் நிச்சயமாகவே சவமாய்விட்டான்" என்றான்.

அத்தந்திர வஞ்சகி "ஆ! நீ என் பூரணக்காதலைப் பெற்றாய். இப்போது நமது காரியமனைத்தும் பூரணமாக நிறைவேற நான் உடனே செய்யவேண்டிய காரியங்கள் அனேகமிருக்கின்றன. நீ யுன் அறைக்குச் சென்று சற்று நித்திரைசெய்" என்றாள். அப்பாசாமி அவள் கூறிய வஞ்சகமொழிகளை யெல்லாம் உண்மை வாக்கியங்களேயென்று நம்பிக்கொண்டு தன் அறைக்குச்சென்றான்.

குமுதவல்லிச் சீமாட்டி இதுகாறும் "அப்பாசாமி சென்ற காரியம் நிறைவேறுமோ நிறைவேறாதோ, நிறைவேறினும் அவன் சிக்கிக்கொண்டு பயத்தால் யாவும் கூறிவிட்டால் என்ன செய்வது" என்று இவ்விதமான பல கலவரங்களாலும் சந்தேகங்கள் திகில் முதலிய வற்றாலும் வேதனைப்பட்டுக்கொண் டிருந்தாள்.

இப்போது அரசன் கொல்லப்பட்டான் என்று நம்பிய பின் வேறுவிதக் கலவரங்கள் அவள் மனதிலுதித்தன. வேறுவித பீதியும் தோன்றியது. "நமது நண்பர்கள் உடனே நம்புதல்வனை அரசன் என்று பகிரங்கப்படுத்தினால் ஜனங்கள் பேசாமல் ஒப்புக்கொள்வார்களோ, அல்லது அரசன் கொலையுண்டதால் கோபமூண்டு, இவர்

களே கொன்றுர்கள் என்று அய்யங்கொண்டு பொங்கிக் கோபவெறிகொண்டு கலகம் செய்யத் தொடங்கி விடுவார் களோ! இந்நேரம் அரண்மனையில் என்ன நடக்கிறதோ. ஆ! நமது மைந்தனிடம் சங்கதியைக் கூறலாமோ! நாமே போய் அரண்மனை யருகில் நின்று என்னநடக்கிறதென்று விசாரிக்கலாமோ, அடடா இப்பஞ்சநாதம் பிரபு ஏன் இன்னும் வரவில்லை. வீண் ஆலசியம் செய்வானேன்?...'' என்று பலவிதக் கலக்கங்களால் அவள் மனம் பெருங் குழப்பத்தில் விழுந்தது.

## 43-வது அத்தியாயம்

குமுதவல்லியும் பஞ்சநாதம் பிரபுவும்—குமுதவல்லியின் மனவேதனையும் தந்திர சூழ்ச்சிகளும்—கர்னல் இரகுநாதர் சிறையாக்கப்பட்ட விவரம்—உலகநாயகனுக்கும் அமராவதிக்கும் கலக்கம்—மரணவிசாரணை.

குமுதவல்லிச் சீமாட்டி இத்தகைய பெருங்கலவரத் தில் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கையில் ஒரு வேலைக்காரன் வந்து பஞ்சநாதம் பிரபு வந்திருக்கிறார் என்றான். மறுநிமிடமே அப்பிரபு அறைக்குள் வந்த தும் வேலைக்காரன் கதவை மூடிக்கொண்டு வெளியில் சென்றான்.

பிரபுவின் முகத்தைக் கண்டதே அவர் கொண்டுவந் திருக்கும் சமாசாரம் தனக்கு அனுகூலமான தல்ல வென்று சீமாட்டியின் மனதிற்பட்டது. அவள் அவரை நோக்கி "பிரபுவே! என்ன சங்கதி? என்ன சங்கதி? சீக்கிரம் கூறும்'' என்றாள். பிரபு "ஏன்? நீ இன்னும் நடந்த சங்கதியைக் கேள்விப்படவில்லையோ?'' என்றார்.

சீமாட்டி.—ஆ! கேள்விப்பட்டேன். அப்பாசாமி தன் வேலையைச் செய்து முடித்தான்.

பிரபு.—"ஆம், முடித்துவிட்டான். ஆனால் அனுவசியமான வீண் கொலை நடந்துவிட்டது" என்றார்.

இதைக் கேட்டதே அச்சீமாட்டி பேரிடிவிழுந்தவள் போல் ஆவிசோர்ந்து மிக்க ஆத்திரத்தோடு "என்ன? நீர் கூறுவது? சிக்கிரம் கூறும். நீங்கள் அபசெயமடைந் தீர்களோ? என் புத்திரன் அரசனாகவில்லையோ"? என்றாள்.

பிரபு.—"அரசன் மடியவில்லை. வீணாக யாரோ ஒரு அன்னிய மனிதன் கொல்லப்பட்டான். பெரிய தவறு நடந்து விட்டது" என்று நடந்த விஷயங்கள்யாவும்? கர்னல் இரகுநாதர் சிறையாக்கப்பட்டது வரையில் விவரமாகக் கூறினார்.

இதைக்கேட்டதே குமுதவல்லிச் சீமாட்டி பாதிபிராணன் நீங்கியவள்போல் ஆசனத்தில் சாய்ந்து பிரமையடைந்து மரம்போல் சற்று நேரம் அசைவற்றவளானாள்.

பிரபு.—"ஆம். அனுவசியமான கொடுங்கொலை நடந்து விட்டது. நமது ஆலோசனை அடியோடு மறுபடி என்றும் முயலக்கூடாத விதமாய் அழிந்து போயிற்று" என்றார்.

சீமாட்டி பெருந்திகிலடைந்து "என்ன மறுபடி முயல விட்டாதபடியா?" என்றாள்.

பிரபு.—"ஆம். இப்போது நடந்த சம்பவத்தால் நமது நண்பர்களுக்கெல்லாம் தைரியமும் துணிகரமும் அடியோடு போய்விட்டன. அவர்கள் மனங் குன்றி விட்டது. இனி அந்த விஷயத்தைக் கவனிக்கவே மாட்டார்கள். இப்போது பொழுது விடிந்ததே

முதலாவதாக அவர்கள் செய்யப்போகிற வேலை யென்னவெனில் அரசனிடம் சென்று அவன் ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டதற்காகச் சந்தோஷம் காட்டப்போகிறார்கள் " என்றார்.

சீமாட்டி.—" அய்யோ இது எவ்வாறு முடியுமோ ?" என்றாள்.

பிரபு.—ஒரு ஆபத்தும் நேராது. ஆனால் அப்பாசாமி மௌனமாக விருப்பானா? தான் ஆநீதமாகப் பயனற்ற கொலைசெய்து விட்டதையும், நிரபராதியாகிய ஒருவன் தனக்குப் பதில் வீணாய் மரணதண்டனை படையப்போவதையும் அறிந்தால் அவன் மனக் கொதிப்பும் காதல் வெறியும் யாவும் அடங்கிப்போய் நேர்மாறான உணர்ச்சி யுண்டாகிவிடாதே? அது ஒரு பயந்தான் இருப்பது.

சீமாட்டி.—அதற்கு நான் பயப்படவில்லை. அவன் பூரணமாக என் மையலில் சிக்கிக்கொண் டிருக்கிறான். அவன் வாயை மூடிக்கொண் டிருக்கும்படி செய்து விடுவேன். ஆனால் அவன் விஷயத்தில் எப்படி நடந்துகொள்வதென்பதே விளங்கவில்லை. முன்னமே அவன் விஷயத்தில் எனக்கு வெறுப்பு. இப்போது நாம் தூண்டியே அவன் கொலைசெய்தானெனினும் கொலைசெய்த பாதகன் என்பது இப்போது அவன் விஷயத்தில் சொல்லொணு வெறுப்பை யுண்டாக்குகிறதன்றோ.

பிரபு.—சீமாட்டியே ! இது நிறைவேறியிருந்தால் இதனால் அடையத்தக்க பலனில் பெரும்பாகத்தைத் தாமே யடைந்திருப்பீர் ஆகையால் இப்போது இதனாலுண்டாகும் இலச்சையையும் தாங்களே யனுப

விக்கவேண்டுவது நியாயம். என் வரையில் நான் இன்னம் இரண்டொரு நாட்களில் எங்கேனும் அன்னிய நாட்டிற்குப் போயிருந்து இக்குழப்பம் அடியோ டடங்கிய பின்பே வருவேன். அந்த அரசன் என்னைப் படுத்திய அவமானத்திற்கு ஆகா அவன் மேல் சரியான வஞ்சந்தீர்த்துக்கொள்ள விருந்தேன்.

சீமாட்டி.—ஆகா. தங்கள் சுயநலங்கருதியே என் துவேஷத்தை எண்ணெய் வார்த்து வளர்த்தீர். கொலைக்கு ஏற்பாடு செய்யும்படியாக என்னைத் தூண்டினீர். இவ்வளவும் உமது வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளக் கருதியே.

பிரபு.—“ பேஷ் நாம் சச்சரவுசெய்து கொள்வது பெரிய வேடிக்கையாக விருக்கும். தாங்கள் அவ்வாலிபன் மனத்துணிவும் கொதிப்பும் அடங்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். அவனை வெளியில் விடாது சாக்கிரதையாகக் கவனியுங்கள். இனி நான் போய் வருகிறேன் ” என்று கூறியதும் எழுந்து சென்றார்.

குமுதவல்லிச் சீமாட்டியின் மனோநிலைமையிப்போது எவ்வாறிருக்குமென்பதைப்பற்றி இதை வாசிப்போரே சிந்திக்கலாகும். அவள் சதியாலோசனைகளனைத்தும் அடியோடு அழிந்தன. அவள் அகங்காரத்தாலும் ஆத்திரத்தாலும், முன் கோபத்தாலும் தன் காரியங்களில் வரம்பு கடந்தே பிரவேசிப்பது வழக்கம். அவளுடைய இந்த முட்டாள் தனமே எதிரியின் காரியத்திற்குச் செயத்தை புண்டாக்கும் உதவியாகி விடுகிறது. அவளுக்கு முன்னிலும் அதிக அபஜெயத்தையும் அவமானத்தையும் அளிக்கிறது. முன்பு தனக்கு ஒரு கெடுதியும் கருதாது தன்

சுயநலத்தை மட்டுமே கருதி வேலைசெய்துகொண் டிருந்த மதனும்பாள் சீமாட்டியை அழிக்கமுயன்று தானே யடியோடழிந்தாள். முன் இருந்த செல்வாக்கும் அடியோடு போய் அரண்மனைக்குள் நுழையவே அனுமதியில்லாமற் செய்துகொண்டாள். பிறகும் சும்மாயிராமல் சிறைச் சாலையில் இருந்த கர்னல் குமரவேலைக் கள்ளத்தனமாய் தப்பியோடச் செய்ததால், அச்சிறைச்சாலை கவர்னர் வேலையைப் போக்கடித்துக் கொண்டதோடு, தனக்கு ஊர்முழுதும் அவமான முண்டாகும்படி செய்துகொண்டு அரசன் வெறுப்பிற்கு இன்னும் அதிகமாக ஆளானாள். அதோடு இன்னும் மதனும்பாளைக் கெடுக்கவேண்டி ஞானப்பிரகாசம் குருவின் இரகசியங்களை யறிந்து வருவதற்காகக் கர்னல் குமரவேலைப் பாஞ்சால நாட்டிற்கனுப்பியதால் அக்குருவும் அவனும் இருவரும் பருதிபுரப்பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இதனால் மதனும்பாளுக்கு இவளே பேருதவி செய்த மாதிரியாய் விட்டது. கர்னல் அக்குருவிடம் இரகசியத்தை யறிந்து கொண்டு வந்து அரசனிடம் கூறி நமக்கு எங்கே அழிவு உண்டாக்கி விடுவானோ என்று மதனும்பாளுக்கு இருந்த பயம் நீங்கி விடும்படிச் செய்தாள். கடைசியாக விஸ்வநாதன் அவளைப்பற்றி அரசனிடம் கூறி அவளுக்குக் கெடுதியுண்டாக்கும் சமயத்தில் அரசனைக் கொல்லச் சதியாலோசனை செய்து விஸ்வநாதன் மடிய நேர்ந்ததால் மதனும்பாளுக்கு நேரிடவிருந்த ஆபத்து நீங்கியது. இந்த ஒரு விஷயமட்டும் குமுதவல்லிக்குத் தெரியாது. மற்றவைகளை நினைக்க நினைக்க அவள் மனம் பெரிய நரகவேதனையடைந்தது. அதோடு அப்பாசாமியை யென்னசெய்வது என்பது ஒருபெரிய கவலையாய் விட்டது. அவள் தன் படுக்கை யறையில் போய் சயனித்துக்கொண்டவள், இவ்

வேதனையால் நெடுநேரம் நித்திரை வராமல் அவதிப்பட்டாள். கடைசியில் ஒரு யோசனை தோன்றியது. அது இரண்டு வழிகளில் அனுகூலமாக விருந்தது. அந்த யோசனையோடேயே நித்திரை போய்விட்டாள்.

காலையில் எழுந்ததும் குமுதவல்லிச்சீமாட்டி அப்பாசாமி யிருக்கும் அறைக்குச்சென்றாள். அப்பாசாமி முன்னமே எழுந்து உடைகளை யணிந்துகொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் கண்கள் குழி விழுந்து முகம் வெளுத்து விகாரமடைந்திருந்தது. இரவு அவன் மிக்க பயங்கரமும் கலக்கமுமான கனவுகளைக்கண்டதால் நித்திரையின் சுகமின்றி யிருந்தான். ஆயினும் சீமாட்டியைக்கண்டதே அவனுக்கு ஒருவித சந்தோஷமுண்டாயிற்று.

குமுதவல்லி மெதுவாய் நடந்த தவறைப்பற்றி கூறியதே அவன் மிக்க பிரமையடைந்து அதிக மனோவாட்டமுற்றவனானன். சீமாட்டி தந்திரமாக அன்போடு அவனைத் தட்டிக்கொடுத்து "இதற்காக நீ மனக்கலக்க மடைய வேண்டாம். காரியம் தவறிவிட்டாலும் நீ துணிகரமாய் எனக்காக உன் வேலையைச் செய்தவரையில் அதில் ஜய மடைந்திருந்தால் நான் உன்னிடம் எவ்வளவு சந்தோஷ மடைவேனோ அவ்வாறே யிப்போதும் அடைகிறேன். நீ இன்னும் எனக்குச் செய்யக்கூடிய உதவி யிருக்கிறது. உனக்கு என்மே விருக்கும் காதலைக்காட்ட இன்னொரு மார்க்கமிருக்கிறது. அது இதைப்போல் அபாயகரமானதல்ல. உன்னுடைய எஜமானும் அந்தக் குருவும் பருதிபுரப் பாதாளச்சிறையில் அடைக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்கள் வெளிவந்து விட்டால் இப்போதும் என் காரியங்களனைத்தும் கைகூடிவிடும். பணம் எல்லாவேலையும் செய்யும். உனக்குப்போதுமான தைரியமும் துணிகரமும்

சென்னை-600 005
186481

இருக்கிறது. நான் போதுமான பணம் தருகிறேன். நீ யுடனே போய் இக்காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வந்து விட்டால் பிறகு இரண்டொரு நாட்களில் நான் பெருந்தொகையான பணம் பெறுவேன். அதன் பிறகு நாமிருவரும் எங்காவது அன்னிய நாட்டிற்குச்சென்று சந்தோஷமாகவும் நிம்மதியோடும் நம் காதலை யனுப வித்துக்கொண்டிருக்கலாம்'' என்றாள்.

சற்றேனும் உலகஅனுபவமே அறியாத அம்மூட வாலிபன் அவள் கூறிய வார்த்தைகளை யெல்லாம் மெய் யென்றே நம்பிக்கொண்டான்.

சீமாட்டியின் கருத்தாவது, இப்போது முதலாவது இவன் இங்கில்லாமல் தூரத்தில் இருப்பது நலம். தனக் குப்பதில் நிரபராதியாகிய ஒருவன் தண்டிக்கப்படுவதை யறிந்தால் ஒரு சமயம் மனந்தாளாமல் சங்கதியை வெளி யிட்டு விட்டால் என் செய்வது. அதனால் இந்த விவகாரங் களனைத்தும் இங்கு நடந்து முடியும் வரையில் இவன் தூர தேசத்திலிருப்பது நலம். இரண்டாவது இவனுக்கு அங்கு ஒரு வேலை வைத்து விட்டால் அது முடியுமட்டுமாவது வரமாட்டான். அந்த வேலை நிறைவேறி விட்டால் அப் போது தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளவும் அரசன் அன்பைப் பெறவும் வழி யுண்டாய் விடும். இவையாவும் சிந்தித்தே மேற்கண்ட ஏற்பாடு செய்தாள். அப்பாசாமி அன்று பகல் முழுமையும் சீமாட்டியின் மாளிகையிலேயே யிருந்து, தீபம் வைத்தபின், சீமாட்டி யளித்த ஆயிரம் பவுன்களை யெடுத்துக்கொண்டு, சீமாட்டி யளித்த ஒரு நேர்த்தியான குதிரையின்மேலேறிக்கொண்டு பருதிபுரத் திற்குப் பிரயாணமானான்.

* * * * *

கர்னல் இரகுநாதர் கொலை நடந்ததினம் மாலை இரொட்

டிக்கிடங்கிலிருந்து நகரத்திற்குத் தன் புத்திரிவாழும் அகத்திற்கு வந்தார். அவர் ஒரு முக்கியமான குடும்ப விஷயத்தைப்பற்றி ஒரு உளவறியவந்தார். அந்த உளவு அரசனுக்குத்தான் தெரியும். பின்னல் அதன் விவரம் கூறப்படும். அவர் தன் மருமகனிடமும் புத்திரியினிடமும் அச்சங்கதியைப் பற்றி கூறியபோது, அவர்கள் இவர்போய் அரசனிடம் பேசும்போது ஒரு சமயம் ஆத்திரப்பட்டு பேசிவிடுவாரோவென் றஞ்சினர்கள். ஆனல் அவர் தன் காரியத்தைக் கருதி சாந்தமாகவே பேசிவிட்டு வருவதாகக்கூறிய பின், அவர்கள் பேசாமல் இருந்துவிட்டார்கள். அதன் பிறகு அவர் அரசன் அரண்மனைக்குச் சென்றபோது வெளிவாயிலில் இருந்த காவலர் உள்ளேவிட மறுத்துவிட்டார்கள். அதன் பிறகு அவர் அரண்மனையின் மற்ற பாகங்களைப் பார்த்துக் கொண்டே சென்றபோது, ஒரு சிறு கதவு திறக்கப்பட் டிருப்பதைக் கண்டு அவ்வழியே சென்ருர். அவர் அவ்வாறு சென்று ஒரு தாழ்வாரத்தின் வழியே செல்லும் போது அரண்மனை யாட்கள் வந்து "நீர் யார்? எங்கே செல்கிறீர்?" என்று கேட்க, அவர் "நான் அரண்மனையில் ஒரு ஆளைக்கண்டு பேசவந்தேன். அந்த ஆளைப்பார்த்தே தீருவேன்" என்ருர். அவர் வந்த விஷயம் அவர் மனே நிலைமையில் ஒருவிதக் கலவரத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கத்தக்கதாகவிருந்தது. பின்னல் நடந்த விஷயங்கள் முன்னமே கூறப்பட்டிருக்கிறது.

கர்னல் இரகுநாதர் அரண்மனைக்குச் சென்றபின் சுமார் ஒருமணி நேரமாகியும் அவர் வராத்தைக் கண்டு அமராவதியும் உலகநாயகனும் மிக்க கலவரமடைந்தார்கள். அச்சமயம் ஒரு வேலைக்காரன் மிக்க கலவரத்தோடும் பீதியோடும் ஓடிவந்து "அரண்மனையில் யாரோ ஒரு

வன் தவருக அரசன் என்று கருதப்பட்டு கொலைசெய்யப்பட்டதாகவும், கர்னல் இரகுநாதர் கொலையாளியென்றும் பிடிக்கப்பட்டு கோட்டை சிறைச்சாலைக்குக்கொண்டு போகப்பட்டதாகவும் எங்கும் வதந்தியாக விருக்கிறது" என்று கூறினன்.

இதைக்கேட்ட இருவரும் துயர்க்கடலிலாழ்ந்து பரிதபித்துத் துடித்தார்கள். உலகநாயகன் தன் பத்தினிக்கு ஒருவாறு தைரியம் கூறித் தான் சென்று'உண்மையென்னவென்று விசாரித்து வருவதாக வெளியிற் சென்றுன். அவர் கொலை செய்திருக்க மாட்டாரென்றுமட்டும் அவர்களுக்கு நம்பிக்கையுண்டு. ஆயினும் விவரம் தெரியாததால் யாவும் பெருங்கலக்கமாக விருந்தது. உலகநாயகன் அரண்மனைக்குச் சென்று அரசனுடைய வேலையாட்களில் ஒருவனைக் கண்டு பணம்கொடுத்து உண்மையாக நடந்த சங்கதியாவும் அறிந்து வந்தான்.

அமராவதி உடனே சென்று தன் தந்தையைக் காண ஆவல் கொண்டாள். ஆனால் அந்தவேளையில் சிறைச்சாலையில் உள்ளேவிட மாட்டார்கள் என்று கூறி உலகநாயகன் அவள் மனதைத் தேற்றினன். மறுநாள் காலை பத்துமணிக்கு அரண்மனையில் மரண விசாரணை நடக்கப்போவதாய்த் தெரிந்தது. ஆகையால் உலகநாயகன் காலை எட்டு மணிக்கு அமராவதியை மட்டும் சிறைச் சாலைக்குச் சென்று அவள் தந்தையை கண்டு பேசும்படி ஒரு வண்டியி லேற்றிவிட்டு, தான் தனக்கு அறிமுகமான ஒரு பாரிஸ்டரைத் தன் மாமனர் பட்சத்திலிருந்து விவகாரத்தை நடத்தும்படி ஏற்பாடு செய்வதாகக் கூறிவிட்டு பாரிஸ்டரின் வீட்டை நோக்கிச் சென்றுன். அவன் மனதில் எவ்வளவோ கலக்கமிருப்பினும் தைரியமாக வேலை

செய்யத் தீர்மானித்தான். உலகநாயகன் பாரிஸ்டர் வீட்டிற்குச் செல்லுமுன், இரொட்டிக்கிடங்கிலுள்ள தன் மாமியாருக்கும் கர்னல் இரகுநாதருடைய தங்கையாகிய இராஜாம்பாளுக்கும் பக்குவமாய்ச் சங்கதியை யறிவிக்கும்படி ஒரு நம்பகமான ஆளை யனுப்பிவிட்டுச் சென்றான்.

அந்த லாயரின் பெயர் மாசிலாமணிப்பிள்ளை. அவர் இத்தகைய குற்றச்சாட்டுகளில் நிரபராதிகளை மீத்திவைப்பதில் மிக்க பிரசித்திபெற்றவர். நீதியைப்பற்றி வாதிப்பதில் தாக்ஷணியமாவது அச்சமாவது இன்றி எதற்கும் அஞ்சாது விஷயங்களைக்கூறி வாதிப்பதில் மிக்க பிரக்யாதி பெற்றவர். இவருடைய நீதியும் தைரியமுமான சுபாவம் எல்லா நீதவான்களு மறிந்ததே.

காலை சுமார் பத்துமணிக்கு மாளிகையின் ஒரு புறத்தில் கொலைநடந்தவிடத்திற்குச் சமீபத்தில், ஒரு அறையில், மரணவிசாரணை செய்யும் உத்தியோகஸ்தர், துரைத்தன பிரதான லாயர், பிரதமநியாயாதி, ஆயாகிய இவர்கள் ஆயத்தமாக வந்திருந்தார்கள். அரசன் அரண்மனைக்குச் சாமான்க ளளிக்கும் வர்த்தகர்கள் சிலர் ஜூரர்களாக வந்து அமர்ந்திருந்தார்கள். சவம் அடுத்த அறையில் வைக்கப்பட் டிருந்தது.

மரணவிசாரணை உத்தியோகஸ்தர் விவகாரத்தைத் தொடங்கும் சமயத்தில் ஒரு வேலைக்காரன் ஒரு கடிதம் கொண்டு வந்து அவரிடமளித்தான். அவர் அதை வாசித்துப்பார்த்து சபையோரை நோக்கி,

“இக்கடிதம் உலகநாயகன் என்ற பெரியமனிதனிடமிருந்து வந்தது. அவர் கர்னல் இரகுநாதருடைய மருமகன். தன் மாமனார் விவகாரத்தைக்கவனிப்பதற்காகத் தாமும் தமது லாயரும் இங்கு வந்திருக்கும்படி அனுமதி

யளிக்கவேண்டுமென்று கேட்கிறார்'' என்றார். நியாயாதிபதி முதலியவர்கள் சற்றுநேரம் தங்களுக்குள் ஆலோசித்துக் கடைசியில் "அத்தகைய அனுமதி யளிப்பதில் ஒரு ஆக்ஷேபனையுமில்லை'' என்றார்கள்.

இரண்டொரு நிமிடங்களுக்குள் உலகநாயகனும் பாரிஸ்டர் மாசிலாமணிப்பிள்ளையும் சபையில் வந்து உட்கார்ந்தார்கள். பாரிஸ்டர்முன் ஒரு மேஜை போடப்பட்டு அதன்மேல் எழுதுகருவிகள் வைக்கப்பட்டன. அதன் பிறகு விசாரணை தொடங்கியது. முதலில் விஸ்வநாதனை யுள்ளே யழைத்துச்சென்ற வேலைக்காரன் சாட்சியாக விசாரிக்கப்பட்டான். அவன் விஸ்வநாதன் உள்ளே வந்ததைப்பற்றியும் அரசன் அவனை வந்து கண்டு, மறுபடி வருவதாகக்கூறி அவனை யந்த அறையிலிருக்கும்படி கூறிச்சென்றதையும் இயம்பினான். அரசன் தன் சாக்ஷியத்தை வரைந்தனுப்பியதால், அவன் முதலில் விஸ்வநாதனைக்கண்டதையும், பிறகு ஒரு மணிநேரம் கழித்து வந்தபோது அவன் கொல்லப்பட் டிருந்ததைப்பற்றியும் அக்கடிதமூலமாக வெளியிடப்பட்டது. பிறகு கர்னல் இரகுநாதர் அங்கு வந்த விஷயமும், அரசனைக்கண்டபோது அவர் திடுக்கிட்டவிஷயமும் பிறகு நடந்ததும் மற்ற வேலைக்காரரால் கூறப்பட்டது.

அச்சமயம் மரணவிசாரனை யதிகாரி, "கொலையாளி திடுக்கிட்டது சுபாவமே. தான் கொன்று விட்டதாக நம்பிய அரசன் உயிரோடு எதிரில் வருவதைக்கண்டதால் அப்பாதகன் திடுக்கிட்டான்'' என்றார்.

பாரிஸ்டார் மாசிலாமணிப்பிள்ளை தட்டென்றெழுந்து, "ஒரு மனிதன் குற்றத்தைச்செய்ததாகப் பூரணமாக ருசுப்படுத்தப்படு முன், அவனைக் கொலையாளியென்று

தூஷிக்க ஒருவருக்கும் நியாயமில்லை—மரண விசாரணை யுத்தியோகஸ்தர் கூறியதை நான் உறுதியாக ஆக்ஷேபிக்கிறேன்" என்றார்.

அதன் பிறகு மரணவிசாரணை யுத்தியோகஸ்தராகிய 'கோரனர்' என்பவர், "கர்னல் இரகுநாதர் தான் அரண்மனைக்குள் இரகசிய வாயில் வழியாக வந்ததாகத் தானே ஒப்புக்கொண்டிருக்கிறார்" என்றார்.

பாரிஸ்டர் மாசிலாமணிப்பிள்ளை :—"இச் சந்தர்ப்பத்தில் நான் சிலவிஷயங்களைக் கூறவேண்டியது என் கடமையாக விருக்கிறது. முதலாவது அந்த இரகசியவழி கர்னல் இரகுநாதர் அங்கு செல்லு முன்பே திறந்து வைக்கப்பட்டிருந்தது. பூட்டு தாழ்ப்பாள் முதலிய ஏதேனும் உடைக்கப்பட்டிருப்பதாக ஒரு அத்தாட்சியுமில்லை. இனி கொலையாளி யுபயோகித்த கத்தியைப் பார்க்கலாமா?" என்றார்.

உத்தியோகஸ்தர் உடனே கத்தியை யெடுத்து லாயரிடமளித்தார். அவர் அதையுற்றுப்பார்த்து, "இதில் எவ்விதநாமதேயமும் காணப்படவில்லை. ஆனால் இக்கத்தி சாதாரணமாகப் பெரிய மனிதர்களிடம் வேலைசெய்யும் ஒரு கையாள் வைத்திருக்கும் கத்தியென்று கூறத்தகும்" என்றார்.

கோரனர்:—"ஒரு கொலையாளி சமயத்தில் தன்கைக்கு அகப்படும் ஆயுதம்—பெரியமனிதர் உபயோகிப்பதோ, கீழ்த்தரவேலைக்காரர் உபயோகிப்பதோ, கத்தியோ, ஈட்டியோ—எதுவாயினும் சரி. அதை யெடுத்து உபயோகிப்பது சுபாவம்" என்றார்.

லாயர்மாசிலாமணிப்பிள்ளை:—"இருக்கட்டும்; நான் கூறும் ஒரு விஷயத்தைக் கவனித்துக்கொள்ளக் கோரு

கிறேன். கர்னல் இரகுநாதர் மறைத்துக்கூருமல், முன்னமே திறந்து வைக்கப்பட்டிருந்த அச் சிறு வழியே தாம் உள்ளே சென்றதாகக்கூறினர். உண்மையான கொலையாளி அதே வழியாக உள்ளே சென்றிருக்கலாம். அரசன் விசுவநாதனை முதலில் அறையில் கண்டு அவனை யங்கிருக்கும்படி கூறி விட்டுப்போய் ஒருமணி நேரங்கழித்து மறுபடி வந்தபோது அவன் கொல்லப்பட்டிருந்ததைக்கண்டார். அந்த அறுபது நிமிடங்களில் எந்த நிமிடத்தில் கொலை நடந்ததென்பதைக் கொலையாளியும் கடவுளுமே கூறவல்லவர்கள். அரசன் காணும்போது கொலைநடந்து சற்றுநேரம் கழிந்திருக்கவேண்டுமென்று தெரிகிறது. கர்னல் இரகுநாதரே கொலை செய்ததாயின், தான் சென்றவழியே யுடனே திரும்பி ஓடி விடுவதை விட்டு மறுபடி உள் நோக்கிச்செல்ல வேண்டிய அவசியமே யில்லை. ஏன்? உண்மையான கொலையாளி யுள்ளே நுழைந்து கொலை செய்துவிட்டு வெளிச்செல்லுகையில் கலவரத்தாலும் அவசரத்தாலும் கதவை மூடாமலே ஓடிவிட்டானென்றும் அவ்வழியாகக் கர்னல் உள்ளே சென்றாரென்றும் ஊகிக்க நல்ல காரணமிருக்கிறது" என்றபோது,

கோரனர்:—"இப்போதே தாங்கள் குற்றவாளியின் தற்காப்பைப்பற்றி வாதம்செய்வது போல் தெரிகிறது" என்றார்.

லாயர்:—ஆயினும் நான் இப்போது கூறும் இரண்டொரு முக்கிய அம்சங்களை மட்டும் ஜூரர்கள் கவனத்தில் ஏற்றுக்கொள்ளக் கோருகிறேன். கர்னல் இரகுநாதர் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி ஒருவரைக்

காணவே அரண்மனைக்குள் வந்தார். அது குடும்ப சம்பந்தமான விஷயம். அவர் அறியவேண்டியதைக் கூறத்தக்கவர் அரசரேயன்றி வேறொருவராலும் கூற முடியாது. ஆகையால் அரசரைக்காணவே அவர் வந்தார். அரண்மனைக்கு வருமுன் தன் மருமகனாகிய உலகநாயகரையும் புத்திரியையும் கண்டு அவர்களிடம் யாவும் கூறிவிட்டே வந்தார். அது மிக்க நுட்பமான இரகசியவிஷயம். நான் இப்போது அதைக் கூறலாகாது. இங்கு ஏற்படும் முடிவு கர்னல் இரகுநாதருக்குப் பிரதிகூலமானதாக விருப்பின், பிறகு அதை நீதிச்சபையில் பகிரங்கமாகக்கூறவேண்டியதே; அதைப்பற்றி யொன்று மட்டும் கூறுகிறேன். உள்ள உண்மையைக்கூறுகிறேனே யன்றி பயமுறுத்தக் கூறுவதாகக் கருதலாகாது. அந்த இரகசியமான விஷயத்தில் நம் நாட்டில் முதன்மை யந்தஸ்திலுள்ள ஒருவரே முக்கியமாகச் சம்பந்தப்பட்டிருக்கிறார். அதில் அவர் நடக்கை சற்றும் கௌரவமானதாக இருக்கவில்லை'' என்று முடித்தார்.

இவற்றைக்கேட்ட கோரனர், நியாயாதிபதி இவர்கள் கோபமாக முணமுணத்தார்கள். லாயரோ அதைக்கவனியாதவர்போ லிருந்தார். உடனே ஜூரர்கள் இரண்டொரு நிமிடங்கள் குசுகுசு வென்று பேசியதும் குற்றவாளியே யென்று கூற, கோரனர் "கர்னல் இரகுநாதரே அரசனைக் கொலை செய்யவேண்டு மென்ற எண்ணத்தோடு சென்று தவருக விசுவநாதன் என்பவனைக் கொன்றுவிட்டார்'' என்று தீர்ப்பளித்தார்.

## 44-வது அத்தியாயம்

உலகநாயகனுக்கு ஒரு நம்பிக்கை யுதித்தது—அமராவதி தந்தையைக் காணல்—உலகநாயகனும் லாயரும் இரகுநாதரைக்காணல்-வெங்கலக்கோட்டையின் அதிசயமர்மங்கள்—அவசியமான சில விவரங்கள்.

---

இத்தகைய தீர்ப்பே கிடைக்கு மென்று உலகநாயகன் எதிர்பார்த்தானேனும், அதைக் கேட்டதே அவன் மனம் பதைத்தது. உடனே அவனும் லாயரும் அங்கிருந்து புறப்பட்டு வெளியில் வந்து வண்டியில் ஏறப் போகும் சமயம் உலகநாயகன் மனதில் திடீலென்று ஒரு யோசனை யுதித்தது. அவன் ஆவலோடு லாயரை நோக்கி,

"ஆ! நீதிச்சபையில் விசாரணை நடக்க எத்தனை நாட்கள் செல்லும்?" என்றான்.

லாயர்:—சற்று ஆலசியமே ஆகும். ஏனெனில் இரகுநாதர் பெரியகட்சியில் ஒரு பிரசித்திபெற்ற ஆளாகையால் அவரைச் சிறை செய்ததைப்பற்றி அக்கட்சியைச் சேர்ந்த ஜனங்களுக் கிப்போதுண்டாயிருக்கும் மனக்கொதிப்பு ஒருவாறு தணியுமட்டும் ஆலசியம் செய்து பிறகுதான் இதை விசாரிப்பார்கள். எவ்வளவு துரிதமாயினும் இரண்டு மூன்று மாதங்கள் கூடச் செல்லும். அதோடு நாம் வேண்டுமாயின் அற்பகாரணங்களுக்கெல்லாம் ஆலசியத்தை யுண்டாக்கலாகும்" என்றார்.

உலகநாயகன் மிக்க ஆவலோடு, "ஆ! மூன்று மாதம். மூன்றுமாதம்! ஆலசியம் உண்டாக்குவதாய் வாக்களிப்பீர்களா?" என்றான்.

லாயர் அவனை யுற்று நோக்கி, அவன் மனதில் ஏதோ நம்பகம் இருக்கிறதென்று அவர் மனதிற்பட்டதால், அவனை நோக்கி "உனக்கு ஏதோ ஒருவித நம்பகம் தோன்றி யிருக்கிறது. அது உன் மனதிலிருந்து உதித்திருக்கவேண்டும். ஏனெனில் என் மனதில் ஒரு நம்பகமுமில்லை" என்றார்.

உலகநாயகன்:—ஆனால் அவர் கொலையாளி யென்று தாங்கள் கருதவில்லையே.

லாயர்:—"இல்லை. நீ கூறியவிஷயங்களால் அவர் நிரபராதி யென்றே நம்புகிறேன். ஆனால் ஜூரர்களை யவ்வாறு நம்பச்செய்வது கூடாதகாரியம். நாம் வெளியிடப் போகும் விஷயத்தையே அவர்கள் கொலை செய்யக் கருதத்தகுந்த காரணமாகக் கருதிவிடுவார்கள். அதற்குத்தான் நான் அந்த விஷயத்தை யிப்போது வெளியிடாமல், அதைவெளியிட்டால் அரசனுக்கு அகௌரவமுண்டாகு மென்றுமட்டும் அவர்கள் அறியும்படிச்செய்தேன்" என்றார்.

உலகநாயகன்:—ஆம் ஆம் தெரிகிறது. எனக்குள் ஒரு நம்பகமிருக்கிறது. அதனால் பயனடைய நான் நெடுந்தூரம் யாத்திரை செய்யவேண்டும்.

லாயர்:—தூர யாத்திரையா?

உலகநாயகன்:—ஆம். இது ஜனவரிமாதம். ஏப்ரல் மாதம் மத்தியம் வரை ஆலசியம் செய்யக்கூடுமா? தாங்கள் உறுதியாக வாக்களிப்பீர்களா?

லாயர்:—ஆகா. அது வரையில் கட்டாயம் ஆலசியம் செய்யலாம். அது மட்டில் நான் பொறுப்பாளி.

உலகநாயகன்:—சரி, அவ்வளவு போதும். நாம் சிறைச்

சாலைக்குச்செல்வோம். வழியில் என் நம்பிக்கை யென்ன வென்பதைக்கூறுகிறேன்.

இதற்கிடையில் அமராவதி சிறைச்சாலைக்குச் சென்ற வள் அங்கு தன் தந்தையின் கைகால்களுக்கு விலங்கிடப் பட்டிருப்பதைக் கண்டதே உளம்பதைத்து நரகவேதனை யடைந்து தேம்பித்தேம்பி யழுதாள். கர்னல் இரகுநாதர் தைரியத்தோடு அவளுக்குத் தேறுதல் கூறி "குழந்தாய்! நான் கோரமான யுத்தங்களில் எத்தனையோ முறை பிரா ணபத்தில் சிக்கிக்கொண் டிருக்கிறேன். இதில் நான் நிர பராதி என்ற உண்மை என் மனதிற்குத் தேறுதலையுண் டாக்கியிருக்கிறது. ஆண்டவன் நிரபராதிகளைக் காப்பாற் றுவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆனால் நீ யிவ்வாறு துக்கித்தால் நீ விடும் ஒவ்வொரு கண்ணீர்த்துளியும் என் மனதில் ஊற்றப்படும் உருக்கிய ஈயம்போல் எனக்கு வேதனையை யுண்டாக்குகிறது.

நீ யுன் மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு மிக்க கோரசமாசாரத்தைக் கேட்டுச் சகிக்கவும் ஆயத்தமாக விருக்கவேண்டும். ஏனெனில் சமயோசித அத்தாக்ஷி எனக்குப் பலமான விரோதியாக விருக்கிறது. நான் பெரிய கட்சியைச் சேர்ந்தவன் என்பதனாலேயே அக் கொடிய பாதகர்கள் நான் அரசனைக்கொல்ல வந்த தாகவே தீர்மானித்து விடுவார்கள். ஆகையால் நீ எத் தகைய ஆபத்தையும் சகிக்க ஆயத்தமாக விருக்கவேண் டும்" என்று கூறினார்.

இவர்கள் இவ்வாறு மிக்க துயரமான சம்பாஷணையி லிருக்கும்போது உலகநாயகனும் லாயர் மாசிலாமணிப் பிள்ளையும் அவர்கள் இருக்கும் அறைக்குட் சென்றார்கள் கோரனர் விசாரணை நடப்பதையும் உலகநாயகன் தனக்

காக ஒருலாயரை யமர்த்திக்கொண்டு விசாரணையில் நடக்கும் சங்கதிகளை யறிந்துவரச் சென்றிருப்பதையும் தன் புத்திரியின் மூலமாக அறிந்த கர்னல் இரகுநாதன், அவர்கள் வந்ததே ஆவலோடு அவர்களை நோக்கியவர் அவர்கள் முகக்குறியால் விவகாரம் தனக்கு விரோதமாகவே முடிந்ததென் றுணர்ந்தார்.

கோரனர் தீர்ப்பு வெளியிடப்பட்டதே அமராவதி மிக்க துயரத்தோடு பிரலாபித்தாள். அச்சமயம் நடந்த கோரகாட்சியை விவரிக்க நமக்கு விருப்பமில்லை. நால்வரும் சற்று நேரம் சம்பாஷித்தபின் உலகநாயகன் ஆலோசித்திருக்கும் சங்கதி வெளியிடப்பட்டதே, கர்னலுக்கும் அமராவதிக்கும் தங்களை யறியாமலே ஒருவித நம்பிக்கையும் மன ஆறுதலும் உண்டாயின. கர்னல் தனக்கு உதவி செய்வதற்காக அப்போதுதான் மணம்புரிந்துகொண்ட தம்பதிகள் பிரிக்கப்படுவதைப்பற்றி வியாகூலப்பட்டார். அமராவதி " தந்தையே ! என் புருடர் நான் வேண்டாமென்றும் கேட்கமாட்டார். அவர் போகும் காரியம் கட்டாயம் அனுகூலமாக முடியும். ஆகையால் என் கொழுனன் கொஞ்சகாலம் என்னை விட்டுப்பிரிந்து தூர யாத்திரையாகச் செல்வது தங்கள் பிராணனிலும் பெரிதல்ல " என்றாள். கர்னல் சதிபதிகளின் விசுவாசத்தைக் கண்டு, முக்கியமாக உலகநாயகன் தனக்காக எடுத்துக் கொள்ளும் சிரத்தையையும் கஷ்டத்தையும் கண்டு மிக்க பெருமையும் சந்தோஷமும் கொண்டு அவனை யாசீர்வதித்துப் புகழ்ந்தார். உலகநாயகன் இனியொருவினாடியும் ஆலசியம் செய்யலாகாதென்று தன் மனைவி, மாமன், லாயர் மூவரிடமும் விடைபெற்றுக் கொண்டு சிறைச்சாலையினின்று வெளிப்பட்டு ஒரு மணி நேரத்திற்குள்ளாக இல

வணபுரியை விட்டுத் துறைமுக நகரை நோக்கித் துரிதமாகச் செல்வானுயினன்.

*    *    *    *    *

இலவணபுரி நாட்டின் தென்பாகத்தில் சுமார் கடலில் முன்னூறு மைல் தூரத்தில் மங்களத்தீவு என்ற ஒரு தீவு இருக்கிறது. நமது கதை நடக்கும்போது அத்தீவு ஒரு ஜாகீர்தாரன் வசத்தில் இருந்தது. ஜாகீர்தாரன் என்று பெயராக விருந்தாலும் அவன் வரையில் அவன் ஒரு சுயாதீன அரசன்போல் அத்தீவை யாண்டுவந்தான். அங்கு அவன் இட்டதே சட்டம். நமது கதை நடக்கும் போது அதன் ஜாகீர்தாரனுக விருந்தவன் பெயர் மேகநாதம் பிரபு. அவன் தனக்கு வருமானம் வருவதை மட்டுமே கவனிக்கிறவனன்றி மற்றப்படி தன் குடிகளின் க்ஷேமம் முதலிய எதையும் கவனிக்கிறவனல்ல. அச்சிறு தீவிற்கு அவனே சர்வவல்லமையுடைய அரசன். அவன் ஒரு அரசனுக்கும் வரிகட்டுவதில்லை. அத்தீவு இலவணபுரி பாஞ்சாலம் முதலிய இரண்டு மூன்று இராஜ்ஜியங்களுக்குச் சமீபமாக விருப்பதால் அத்தேசங்களில் கொலை களவு முதலிய துஷ்டவேலைகளைச் செய்து இராஜாங்கத்தாரின் தண்டனைக்கு அஞ்சவேண்டியவர்க ளெல்லாம் இம்மங்களத் தீவிற்கு ஓடிவந்து விடுவார்கள். மேகநாதம் பிரபு அந்த அந்நிய நாட்டாருக்குத் தலைக்கு இவ்வளவென்று வரிவிதித் திருக்கிறுன். வருடாவருடம் அவ்வரியைச் செலுத்தி விட்டால் அவர்கள் அங்கு நிம்மதியாக வசிக்கலாம். இத்தகையோரே அத்தீவிலுள்ள குடிகளில் பெரும்பாலார். இவர்கள் வரிசெலுத்துவதற்கும், தங்கள் சீவனத்திற்கும் வேண்டிய பொருளுக்காக கொலை களவு சூதாட்டம் முதலிய காரியங்களையே பெரும்பாலும் செய்வார்கள். அவர்கள் கொள்ளைப்பொருளில் ஒரு பாகத்தை

ஜாகிர்தார் அதாவது தங்கள் அரசனுக் களித்துவிட்டால், அவர்கள் செய்கைகள் கவனிக்கப்படமட்டா. இது மட்டுமல்ல, இவர்கள் கடற்கொள்ளைகளும் அடிப்பார்கள். இலாபத்தில் பாதி இரகசியமாக அரசனுகிய பிரபுவின் பொக்கிஷத்தில் போய்ச் சேர்ந்துவிடும். இவ்வாற்ருல் குடிகளும் அரசனும் ஒருவருக்கொருவர் தகுதியுடையவர்களாகவே யிருந்தார்கள். இதற்கு மேல் அங்குள்ள நடவடிக்கைகளைப்பற்றி நாம் கூறவேண்டுவதில்லை. இவ்வளவிற்கும் பேருக்கு ஜனப்பிரதிநிதிகள் சபையென்று கூட ஒன்றுண்டு. ஆனல் அதிலுள்ள கொஞ்சம்பேர் அரசன் தயவிற்குப் பூரணமாய்க் கட்டுப்பட்டவர்க ளானதால் அவர்கள் இல்லாததுபோலவே யாகும்.

இத்தீவின் தென்கிழக்குக் கோடியில் ஒரு சிறிய ஆற்றின் கரையில் இதன் தலைநகரமாகிய கனகபுரி என்ற நகரம் இருக்கிறது. இதுவே அத்தீவின் பிரதானத் துறைமுகநகரமு மாகும். மேகநாதம் பிரபு வசிப்பது ஒரு பலமான கோட்டையாகும். அதன் பெயர் வெண்கலக் கோட்டை. அதன் சுற்றுமதில் சுவர்கள் சுமார் எட்டடி அகல முடையவை—அதிலுள்ள மாளிகை பல கட்டிடங்கள் சேர்ந்தது. அதில் பிரப்புவின் குடும்பம் வசிக்கும் பாகம் பிரம்மாண்டமான இரண்டடுக்கு மாளிகையாகும். அதில் அனேகம் நீண்ட அறைகளிருக்கின்றன. மாளிகையில் பலவிடங்களில் ஏறிச்செல்லும் படிக்கட்டுகளும் சுழல் படிக்கட்டுகளும் உண்டு. யாவும், மதில் சுவர்கள் முதல், கருங்கல்லால் கட்டப்பட்டவை. அதிலுள்ள சுவர்களின் பலத்தினுலேயே அக்கோட்டைக்கு வெண்கலக்கோட்டையெனப் பெயரிடப்பட்டது. கட்டிடங்களின் மையத்தில் ஒரு நிலவறைக்கிடங் குண்டு; அதன் ஒரு மூலையில்

கீழிருந்து மேல்தளம் வரையில் ஒரு சுழல்படி யிருக்கிறது. இன்னொரு மூலேயில் ஒரு பலமான இராட்டினம் நாட்டப்பட்டிருக்கிறது. அதிலுள்ள சக்கரத்தில் ஒரு பலமான தடித்த கயிறு கட்டப்பட்டிருக்கிறது. அது சாதாரணமாய் கிணறுகளில் ஜலம் சேந்துவதற்கு நாட்டப்படும் இராட்டினம் போன்றதே. ஆனல் அதன்கீழ் இருக்கும் அகன்ற துவாரம் கிணறல்ல. அக்கயிற்றின் நுனியில் கட்டப்பட்டிருப்பது ஒரு குடமல்ல. அது ஒரு பெரிய சாய்ப்பு நாற்காலி. அத்துவாரம் கீழே இருண்ட ஆழமான விடத்திற்குச் செல்வதால் மேலிருந்து நோக்கின் அடிப்பக்கம் கண்களுக்குப் புலப்படாது. அந்த இராட்டினம் இருக்குமிடத்தைச்சுற்றி மேல் தளத்தில் உயரமான சுவர் எழுப்பப்பட் டிருப்பதால் நகரத்திலுள்ளோர்க்காவது கோட்டையின் சுற்று மதில் சுவரின்மேல் உலவுவோர்க்காவது அந்த இராட்டினம் போன்ற எந்திரம் புலப்படாது. அந்த நாற்காலி வெயில் மழையில் இருந்து சேதமடையாம லிருப்பதற்காக அந்த விடத்தில் மட்டும் மேலே தாழ்வாரம் போன்ற கூரை யமைக்கப்பட்டிருக்கிறது. இந்த எந்திரம் எதற்காக உபயோகப்படுகிறது ? இது போகப்போகத் தெரியும்.

இனி அங்கு வசிக்கும் குடும்பத்தைப்பற்றி கூறுவோம். நமது கதை நடக்கும்போது மேகநாதம் பிரபுவுக்கு வயது எழுபதிற்குமேலாயிற்று. அவர் வியாதியுற்று பலகீனமடைந்து தன் அறையை விட்டு வெளி வராத நிலேமையிலிருக்கிறர். அவர் இருக்கு மறை மாளிகையின் வடகோடியி லிருக்கிறது. அவர் மனைவி யிறந்து நெடுநாட்க ளாயின. அவருக்கு, வீரரத்னம் என்ற முப்பத்திரண்டு வயதுடைய ஒரு புத்திரனும் மூன்று புத்திரி

களுமுண்டு. மூத்தவளாகிய கற்பகவல்லிக்கு முப்பது வயது, இரண்டாவதாகிய சண்பகவல்லிக்கு இருபத்தெட்டு வயது. மூன்றுவதாகிய துளசிபாய்க்கு இருபத்தாறு வயது.

வீரரத்னம் பெரும்பாலும் இலவணபுரி, பருதிபுரம் முதலிய செல்வம் பொருந்திய நாகரீகமான வெளிநாட்டுத் தலைநகரங்களிலேயே கேளிக்கையாக வசித்து வருகிறன். எப்போதோ ஒரு சமயம் தன் மாளிகைக்கு வந்தால் இரண்டொரு வாரங்களுக்கு மேல் இருப்பதில்லை. மேற்கண்ட மூன்று பெண்களுமே சதா மாளிகையிலேயேயிருந்து வருவோர். இவர்கள் தங்கள் தந்தையை மிக்க சாக்கிரதையாகப் பாதுகாத்து வருகிறுர்கள். ஆனல் இதைவாசிப்போர் இவர்கள் கேவலம் தந்தையிடமுள்ள அன்பினலேயே பக்தியோடு அவ்வாறு செய்வதாகக் கருதலாகாது. இவர்கள் செய்கை சுயநலங்கருதியே. தந்தை அறையை விட்டு வெளிவராத நிலைமையிலிருப்பதால் இப்போது அத்தீவின் துரைத்தனமே இவர்களால்தான் நடக்கிறது. இவர்கள் தங்கள் பிரியப்படி, ஒருவரும் தடுத்துக் கூறுவோரின்றி, மனம் போன போக்காய் யோக்கியதை, அயோக்கியதை, நியாயம் அநியாயம் என்பதைக் கவனியாமல், தங்கள் அற்ப இச்சைகள் எது வாயினும் அவற்றைத் திருப்தி செய்துக்கொள்வதிலே நாட்டமுடையவர்களா யிருந்தார்கள். தங்கள் தந்தை யிறந்தால் தங்கள் அதிகாரம் பிறகு செல்லாது. ஏனெனில் தமையனுக்கு இவர்கள் அயோக்கிய நடக்கைகள் சற்றும் பிடிக்கவில்லை. அவன் தன்னுலான வரை யிவர்களுக்குப் புத்தி கூறிப்பார்த்துக் கடைசியில் வெறுப்படைந்தே போய் விட்டான். இவர்களுக்குத் தங்கள் ஒரே சகோதரன்

மேல் எத்தகைய விசுவாசம் இருக்கிறதென்பது போகப் போக இவர்கள் செய்கையால் விளங்கும். இத்தகைய செல்வச் சீமானுடைய புத்திரிகள் ஏன் இன்னும் மணம் புரிந்து கொள்ளவில்லையென்று இதை வாசிப்போர் கருதலாகும்.

சில வருடங்களுக்கு முன்பு இவர்கள் மூவரும் இலவணபுரிக்குச் சென்று கொஞ்சகாலம் அங்கு தங்கியிருந்தார்கள். கூடிய வரையில் அழகு வாய்ந்த இவர்களை அனேகம் வாலிபர்கள் மணம் செய்யப் பிரியப்பட்டேயிருப்பார்கள். ஆனால் இவர்கள் அடியோடு நெறிதவறிவிட்டார்களென்று பகிரங்கமாய் யாவர்க்கும் தெரிந்துவிட்டது.

இவர்களுக்குள் மட்டும் பூரண ஒற்றுமையுண்டு. அதுவும் ஒருவர் துர்நடக்கை யொருவர்க்குத் தெரிந்திருப்பதால் நேரிடும் ஒற்றுமையேயாகும். அக்கிரமமும், அகௌரவமுமாகிய நடக்கைகளில் மூவரும் ஒன்று சேர்ந்து பிரவேசிப்பார்கள். மிக்க மர்மமான சமிக்கைகளாலேயே ஒருவர் கருத்தை யொருவர் அறிவார்கள்.

கோட்டைக்குள் அறுபது பேர்கள் அடங்கிய காவற்படை யொன்றுண்டு. இந்தக் காவலர் அத்தீவிலுள்ளவர்களில் பொருக்கி யெடுக்கப் பட்டவர்கள். மிக்க பலமுடையவர்கள், எதற்கு மஞ்சா நெஞ்சினர்; குரூரமான இரக்கமற்ற குணமுடையோர். தங்கங்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கிற வரையில் தங்கள் மேலதிகாரிகள் கட்டளைகள் எப்படிப்பட்டவையாயினும் அவற்றை நிறைவேற்றி விடவேண்டும் என்ற ஒரே நோக்க முடையோர். கோட்டைக்குள் என்ன நடந்தாலும் கண்ணுங் காது மில்லாதவர்கள்போல் இருப்பார்கள். அவர்களுக்கு

கோட்டைக்கு வெளியில் ஊரிலுள்ளவர்களோடு எவ்வித சம்பந்தமுமில்லே. அவர்களுக்கு நல்ல உடைகளும் தாராளமாக நல்ல உணவுப் பொருள்களும் குடிவகைகளும் கோட்டைக்குள்ளேயே அவர்களுக்கென்று விடப்பட்ட பிரத்தியேக விடத்தில் அளிக்கப்படுகிறது. அங்கு அவர்கள் தங்கள் பிரியம்போல் கேளிக்கையாக இருக்கலாம்.

இவர்களிலேயே பனிரண்டு பேர் நிலவறைக்கிடங்கு காவலராயிருக்கிருர்கள். இவர்கள் வரையில் இவர்கள் பிரத்தியேகமாய்க் கிடங்கின் ஓர் பாகத்திலேயே யிருக்கிருர்கள். இவர்கள் மற்றகாவலர்களோடு கூடச் சேரலாகாது. கிடங்கைப்பற்றிய இரகசிய மனைத்தும் அவர்களுக்குத் தான் தெரியும். அவர்கள்வரையில் உண்ணவும் குடிக்கவும் இஷ்டப்படி கேளிக்கையாக இருக்கவும் நிலவறைக் கிடங்கிலேயே பிரத்யேக வசதியுண்டு.

நகரிலுள்ள ஜனங்கள் கோட்டையில் நடக்கும் விஷயங்களைப்பற்றி மிக்க பயத்தோடு குசுகுசுவென்று பேசிக்கொள்வது வழக்கம். ஏனெனில் அங்கு நடக்கும் சங்கதிகளைப்பற்றி பேசினுல் அவர்கள் பிராணனுக்கே ஆபத்தாக முடியும். மாளிகையின் மேல்தளத்தில் இராட்டினம் போன்ற இயந்திரம் இருப்பது அனேகர்க்குத் தெரியும். சில இரவுகளில் அந்த எந்திரமிருக்கு மிடத்தில் தீப வெளிச்சம் கண்டிருக்கிருர்கள். பயங்கரமான கூச்சல்களும்கூடக் கேட்டிருக்கிருர்கள். அவர்களுக் கெல்லாம் கோட்டையைப்பற்றிய மர்மங்கள் என்ருல் நெஞ்சு நடுங்கிவிடுமாயினும் விபரமாக எதையுங் கூறமுடியாது. கோட்டை விஷயத்தைப்பற்றி விரோதமாகப் பேசியவர்கள் சிலர் திடீலென்று மாயமாக மறைந்துவிட்டார்கள்.

அவர்கள் பிரபுவின் கப்பலிலேற்றப்பட்டு அன்னிய நாட்டுக் கரைகளில் விடப்படுகிருர்க ளென்றும், மறுபடி தீவிற்கு வந்தால் மரணதண்டனை யளிக்கப்படுமென்று பயமுறுத்தப் படுகிருர்களென்றும் வெளியில் வதந்தி. ஆனல் அதைக் கேட்டும் மூத்தோர் பயங்கரப் பார்வையோடு தலை யசைப்பார்கள். உண்மை யின்னதென்று கூற அவ்வாறு மறைந்து போனவர்களில் ஒருவரேனும் திரும்பிவந்ததே யில்லை.

மேல்கண்ட விஷயங்களால் அத்தீவின் ஜனங்கள், கோட்டையின் விவரம், பிரபுவின் குடும்பம் இவைகளைப் பற்றி நமது கதைக்கு அவசியமானவை விவகரித்தோம். இனி கதையைத் தொடர்ந்து செல்வோம்.

---

## 45-வது அத்தியாயம்.

மூன்று சகோதரிகளும் காப்டேன் உருத்திரப்பனும்—மர்மமான சதியாலோசனையும் சகோதரிகளின் கட்டளையும்-புயற்காற்றில் கப்பற்சேதம்—கப்பற் சேதத்தில் தப்பிய மனிதன் கோட்டைக்குக் கொண்டுபோகப்படல்—உலகநாயகனும் மூன்று சகோதரிகளும்—உலகநாயகனுடைய மர்மமான ஆபத்து.

---

இலவணபுரியில் அரசன் அரண்மனையில் நடந்த கொலையைப்பற்றிய மரண விசாரணை நடந்த நான் கைந்து நாட்கள் கழித்து ஒருநாள் இரவு ஒன்பதரைமணி யிருக்கும். அப்போது வெண்கலக் கோட்டையின் மாளிகையிலுள்ள ஒரு அறையில் கற்பகவல்லி, சண்பகவல்லி, துளசிபாய் மூவரும் உட்கார்ந்துகொண் டிருக்கிருர்கள்.

அவர்கள் அழகைப்பார்த்து களிக்கத்தக்கவர்கள் ஒருவருமில்லாவிடினும் அவர்கள் நல்ல பொற்சரிகை யிழைக்கப்பட்ட ஊதாநிற முகம்மல் பட்டுடைகளையும் விலையுயர்ந்த இரத்னுபரணங்களையும் அணிந்துகொண் டிருக்கிருர்கள். அவர்கள் எதிரிலுள்ள மேஜைமேல் உயர்தரமான ஒயின் வகைகளும் உலர்த்தித் தேனில் ஊறவைத்த பல தினுசுப் பழங்களும், பலகாரங்களும் ஏராளமாக வைக்கப்பட் டிருந்தன. அவர்கள் ஆடவர்களைப்போலவே குடி முதலியவற்றில் பழக்கமுடையவர்களென்று இதனுல் அறியலாகும்.

அவர்கள் இருக்கும் அறையானது மிகநீண்ட அறை. அவர்கள் தந்தை யிருக்குமறை ஒரு கோடியிலிருந்தால் இந்த அறை அதற்கு நேராக எதிரிலுள்ள மற்ருெரு கோடியிலிருக்கிறது. அதற்குப் பக்கத்தில்தான் நிலவறைக்கிடங்கு இருக்கிறது. பிரபுவின் அறைக்கு முன் அறை யொன்றிருக்கிறது. அதில் தங்கள் தந்தையின் உபசரிப்புக்காக சகோதரிகளில் ஒருத்திவிட்டு ஒருத்தி முறையாக சயனித்துக்கொள்வார்கள். இவர்களிருக்கும் அறையினருகிலுள்ள தாழ்வாரத்தில் நிலவறைக்குச் செல்ல ஒருவழி யிருக்கிறது.

இவர்கள் மூவரும் அங்கிருக்கும்போது வானம் இருண்டு பயங்கரமான காற்று வீசிக்கொண்டிருக்கிறது. இரண்டு நிமிடங்கள் மூன்று நிமிடங்களுக்கொருமுறை அக்காற்று பயங்கரமான புயற்காற்ருகமாறி வீசுகிறது. அத்தகைய புயற்காற்றடிக்கும்போது, ஏதாவது கப்பல் அத்தீவை நோக்கியாவது அதன் ஓரமாகவாவது வந்தால் அக் கப்பல் அத்தீவின் கரையோரங்களிலுள்ள பாறைகளில் மோதிச் சேதமடைவதுண்டு. அன்று

அடித்த புயல் மிக்க மும்முரமாகவே யிருந்தது. ஆனல் அது அக்கோட்டையில் கட்டிடங்களுக்கு எள்ளளவு அதிர்ச்சியைக்கூட உண்டாக்க முடியாது.

கற்பகம்:—ஆ! இது பயங்கரமான இரவு. ஆம். அன்று அடித்தது அப்படிப்பட்ட புயற்காற்று..." என்ருள்.

சண்பகம்:—ஆம். இரண்டு மாதங்களுக்கு முன்...நமக்கு அந்த இரண்டுபேர் கிடைத்தார்களே...............

மூவரிலும் சிறியவளாகிய துளசிபாய், "ஆம், அந்த இருவரையும் வயதில் முதிர்ந்தவர்கள் என்ற முறைமைப் படி நீங்களிருவரும் கைப்பற்றிக்கொண்டீர்களே.........

கற்பகம்:—ஆம் அப்படிப்பட்ட இரவே. அன்றும் இப் படியே புயல் மும்முரமாக அடித்தது. அலேகள் இப்படியே பயங்கர சத்தத்தோடு பாறைகள்மேல் மோதின.

சண்பகம்:—அன்றும் இதே யிடத்தில் இவ்வாறே நாம் உட்கார்ந்திருந்தோம். ஆம் எல்லாம் இதேமாதிரி தான்.

துளசிபாய்:—"யாருக்குத்தெரியும்? அதே மாதிரி இன்று மூன்ருவதாக ஒரு ஆள் — எனக்காக அனுப்பக் கூடும்" என்று கூறிக்கொண்டே சாளரத்தருகில் சென்று கதவைத் திறந்து பார்த்து, "ஆ! உண் மையாகவே சற்று தூரத்தில் கடலில் ஒரு தீபம் தெரிகிறது" என்று கூறி, காற்றின் வேகத்தால் தீபங்கள் அணைந்துவிடும்போ லிருந்ததால் சாள ரத்தை மூடிவிட்டுப்போய் உட்கார்ந்து "சகோதரி களே! இன்று எப்படியும் ஒரு கப்பற் சேதம் நேரி டும்" என்ருள். மற்ற இருவரும் புன்னகையோடு,

"அப்படியே நேரிடவேண்டுமென்று நீ கடவுளைப் பிரார்த்திக்கிருய்?'' என்ருர்கள்.

துளசி:—"சுபாவந்தானே? உங்கள் இருவர்க்கும் இருவர் கிடைத்திருக்கிருர்கள். என் பாகத்திற்கு ஒருவன் வேண்டுமல்லவோ. ஆகையால் கப்பற்சேதத்தைப் பற்றி நமது ஆட்களுக்கு முன்னுடி கட்டளையிட வேண்டும்'' என்ருள். மூத்தவளாகிய கற்பகவல்லி, ஆம் என்று கூறி மேஜைமேலிருந்த ஒரு வெள்ளி மணியைப் பலமாக அடித்தாள். உடனே சுமார் நாற்பது வயதுடைய ஒரு முரட்டுமாது அவள் எதிரில் வந்தனமளித்து மரியாதையாக நின்ருள்.

கற்பகம் அவளை நோக்கி "மாரியாயி! உடனே சென்று காப்டன் உருத்திரப்பனை யிங்கு வரும்படி கூறு'' என்ருள்.

இரண்டொரு நிமிடங்களில் காப்டென் உருத்திரப்பன் சகோதரிகளின்முன் வந்து மிக்க வணக்கத்தோடு வந்தனமளித்து நின்ருன். அவனுக்கு வயது நாற்பதேயாயினும் துர்ப்பழக்கங்களால் அதிலும் அதிக வயதுடையவன்போல் காணப்பட்டான். அவன் கோட்டையிலுள்ள காவற்படையின் தலைவன்; மிக்க பலம்பொருந்திய தேகமும் சுமார் ஏழடி உயரமும், மிக்க கடினமும் தீக்ஷணியமுமான சொரூபத்தையு முடையவன். அங்குள்ள படை வீரர்களுக்கு அவன் தகுந்த தலைவனே. தன் எஜமாட்டிகள் செய்யும் எத்தகைய காரியங்களையும் மிக்க கௌரவம் பொருந்திய சாதாரண நடக்கைகளெனவே கருதுகிறவன்போல் நடிப்பவன். அவன் அவர்கள்முன் வந்து நின்றதும் "எஜமாட்டிகளின் கட்டளைகள் என்னவோ?'' என்ருன்.

கற்பகவல்லி:—கடலில் சற்று தூரத்தில் ஒரு தீபம் தெரிகிறது

காப்டேன்:—நான் முன்னமே அதைக் கவனித்தேன். அதைப்பற்றிய கட்டளை யென்னமோ?

கற்பகம்:—நீ உன் ஆட்களோடு சென்று உங்களால் கூடிய வரை ஆட்களைக் காப்பாற்றுங்கள்.

காப்டேன்:—"காப்பாற்றி அதில்..." என்று குறிப்பாய் அவளை யுற்று நோக்கினன்.

துளசி:—"அதில் ஒன்று கொண்டுவா" என்றாள்.

காப்டேன்:—எஜமாட்டிகளின் கட்டளைப்படி செய்யச் சித்தமா யிருக்கிறேன். வேறு ஏதேனும்...........

கற்பகம்:—"ஒன்றுமில்லை. நீ செல்லுமுன் கொஞ்சம் சாராயம் அருந்திச்செல். குளிருக்குப் பாதுகாப்பா யிருக்கும்" என்று கூறிக்கொண்டே ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் நிறையச் சாராயத்தையூற்றி யளித்தாள்.

காப்டென் உருத்திரப்பன் அதை யருந்திவிட்டு, "எஜமாட்டிகளின் கோரிக்கைகள் யாவும் ஈடேற்ற வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்" என்றான்.

கற்பகம்:—ஆகா தடையின்றி நிறைவேறும். நீமட்டும் வாக்களித்தபடி அச்சமயம் நேரும்போது உதவி செய்தால்.........

காப்டேன்:—நானும் என் கீழுள்ள ஆட்களும் தங்கள் பிரியப்படி செய்ய எப்போதும் ஆயத்தமாக விருக்கிறோம்.

கற்பகம்:—ஆ! உன் ஆட்களுக்குச் சாடையாய் அங்கொரு

வார்த்தை இங்கொரு வார்த்தையாய்க் குறிப்பாய்க் கூறி யிருக்கிறுயோ ?

காப்டென்:—எஜமாட்டிகள் கட்டளையிட்டபடி எதையும் உடனே செய்து முடிப்பதே என் கடமை.

கற்பகம்:—"ஆம் ஆம் தெரியும், இதோ இதைப் பரிசாக அணிந்துகொள்" என்று தன் கரத்திலிருந்த மோதிரங்களில் விலை யுயர்ந்த ஒன்றைக்கழற்றி அவனிடமளித்தாள். உடனே மற்ற இரண்டு சகோதரிகளும் "இதோ இதையும் ஏற்றுக்கொள்" என்று ஒவ்வொரு மோதிரமளித்தார்கள்.

கிடைத்த இலாபத்தால் மிக்க சந்தோஷமடைந்த காப்டென், "என் மனதில் ஒரு விஷயம் தோன்றுகிறது. நான் உங்களுக்கு யோசனைகூற யோக்கியதை யுடையவனல்ல. ஒரு விஷயம் நேர்ந்தால் எஜமாட்டிகள் எதிர்பார்க்கும் அதிகாரம், செல்வாக்கு இவற்றிற்கே ஊனம் நேரிடுமோ" என்றதே.

கற்பகம்:—"போதும் போதும். அதை யோசித்தே யிருக்கிறோம். அந்த விஷயம் சம்பவித்தாலும் எங்களுடைய வல்லமையை யதிகப்படுத்திக் கொள்வோமே யன்றி இம்மியளவுகூட இணங்கிவிடமாட்டோம். அத்தகைய சுயாதீனமும் பெருமையும் உடையவனைக் காணப்படுகிற அந்த ஆள் விஷயத்தில் கூட நான் இளகிய மனமுடையவளாவேன் என்று ஒருபோதும் கருதவேண்டாம். அத்தகைய பலம் பொருந்திய மனதைக்கூட அடக்கிப்பழக்கி எனக்கு இணங்கும்படி செய்துவிடுவேன். கட்டாயம் செய்வேன்" என்ருள்.

சண்பகம்:—அந்த விஷயம் என் வரையில் எவ்வளவோ சுலபமாக நிறைவேறும்.

துளசி:—எனக்கோ இன்னம் அத்தகைய வேலைக்குச் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை.

காப்டேன்:—உங்களுக்குள் அவ்வளவு நம்பகம் இருந்தால் தக்க சமயம் நேரும்போது தாங்கள் என்மேல் பூரண நம்பிக்கை வைக்கலாம். எனக்கு என் ஆட்கள்மேல் பூரண நம்பிக்கை யிருக்கிறது. அவர்கள் நகர ஜனங்களைப் பயமுறுத்தி ஒரு நாளைக்குள் வேண்டிய ஆள்களைச் சேர்த்து விடுவார்கள்.

கற்பகம்:—"இதுவே எங்கள் ஏற்பாடு. இனி நீ போகலாம்" என்றாள்.

காப்டென் உருத்திரப்பன் சகோதரிகளுக்கு வந்தனமளித்துவிட்டு நிலவறைக் கிடங்கிற்குச் சென்றான். அச்சமயம் அங்கு பத்து ஆட்கள் மட்டுமே குடித்துக்கொண்டும் சீட்டாடிக்கொண்டு மிருந்தார்கள். இவர்கள் யாவரும் பூரணமாக ஆயுதங்களணிந்தவர்கள். காப்டன் ஒரு வார்த்தை கூறியதே யாவரும் எழுந்து அவன் கூடப் புறப்பட்டார்கள். இவர்கள் ஐந்தாறு நிமிடங்களுக்குள் கோட்டையைவிட்டு வெளிப்பட்டு கடலோரம் சென்றார்கள்.

காற்று மும்முரமாக வீசிக்கொண்டே யிருக்கிறது. ஒரு கப்பல் சுமார் ஒருமைல் தூரத்தில் கொந்தளிக்கும் கடலில் தத்தளித்துக்கொண் டிருப்பதைக் கண்டார்கள். அச்சமயத்தில் படகைக் கடலில் விடவே முடியாது. கப்பல் எங்கிருந்து வருகிறதென்றும் தெரியவில்லை. காற்றின் வேகத்தால் பாய்ந்துவந்து கரை யோரமுள்ள பாறைகளில் மோதிக்கொண்டு அழிந்தாலும் அழியலா

கும்; தூரத்திலிருக்கும்போதே கவிழ்ந்து முழுகிவிட்டா லும் விடலாகும். நகர ஜனங்களில் சிலர் கப்பற்சேதம் நேர்ந்தால் கரையில் எறியப்படும் சாமான்களைக் கொள்ளை யடிக்கலாமென்று கருதி கரைக்கு வந்திருந்தார்கள். இவர்கள் சற்றுநேரம் நின்றபோது கப்பல் கரையை நெருங்கி வருகிறதென்று அறிந்தார்கள். வரவரக் கப்ப லின் அடித்தட்டும் தெரிந்தது. அச்சமயம் டுமீல் என்று ஒரு பீரங்கி வெடிச்சத்தம் கப்பலிலிருந்து உண்டாயிற்று. அது "கப்பல் ஆபத்தான நிலைமையிலிருக்கிறது உதவி வேண்டும்" என்று அறிவிக்கும் குறி. பிறகு இன்னும் இரண்டு மூன்று வெடிகள் கிளம்பின. வரவரக் கப்பல் கரையை நெருங்கிக் கால்மைல் தூரத்தில் வந்துவிட்டது. அச்சமயம் அதி வேகமாகக் கிளம்பிய ஒரு காற்றுல் கப் பல் பந்தயக்குதிரை பாய்ந்து வருவதுபோல் அதிவேக மாகக்கரையை நோக்கி வந்ததும் ஒரு பாறையில் மோதிக் கொண்டதே, ஏககாலத்தில் பல பீரங்கிகள் சுட்டது போன்ற ஒரு பயங்கர சத்தம் உண்டாயிற்று. மறு விநா டிக் கப்பல் அடியோடு மறைந்துபோக எங்கும் பலகைத் துண்டுகளாக நிறைந்துவிட்டன. கடலில் விழுந்து தத்த ளிக்கும் ஜனங்கள் போடும் கோஷ்டம் பரிதாபமாகவும் பயங்கரமாகவும் இருந்தது. அனேகர் கையிலகப்பட்ட பலகைத் துண்டுகளையும் தூண்களையும் பலவிதக் கட்டை களையும் பற்றிக் கொண்டார்கள். சிலர் நீந்த முயன்ருர் கள். ஆனல் கொந்தளிக்கும் கடல் அலைகளில் சமாளிக்க முடியாமல், ஒவ்வொருவராகக் கடலில் முழுகிவிடத் தொடங்கினர்கள்.

காப்டென் உருத்திரப்பன் தன் ஆட்களை நோக்கி "இதுதான் வேலை செய்யவேண்டிய சமயம்" என்ருன்.

உடனே அனைவரும் கடலின் ஓரத்தில் சென்று தப்பித் தவறி அலைகளால் கொண்டுவரப்படும் ஆட்களை பிடித்து கரையில் கொண்டுவந்து சேர்க்க முயன்றார்கள். அந்தோ கப்பலிலிருந்த ஆட்களில் ஒருவன் தவிர மற்ற அனை வருமே கடலுக்கிரையானார்கள். ஒருவன் மட்டும் மிக்க பலமும் தைரியமுமுடையவனாக விருந்ததால் மிக்க கஷ் டத்தோடு சமாளித்துக்கொண்டு ஓரத்திற்கு வந்தான். ஆனால் அங்கு வந்ததும் ஆயாசத்தால் ஸ்மரணை யிழந்து விழுந்து விட்டான். மறு வினாடி பின்னால் வந்த பிர மாண்டமான அலை அவனைக் கடலிற்கே யிழுத்துக் கொண்டு போய்விட்டிருக்கும். அச்சமயம் அங்கு நின்ற கோட்டை வீரர்களின் காப்டனும் இன்னொருவனும் பாய்ந்துபோய்ச் சட்டென்று அவனை மேட்டிற்குக் கொண்டுவந்து விட்டார்கள். காப்டென் குனிந்து அவன் இருதயத்தைத் தொட்டுப் பார்த்து "ஆ! இவன் உயிரோ டிருக்கிறான்" என்றான்.

அப்போது அங்குவந்திருந்த நகரஜனங்களில் ஒரு வன் காப்டனிடம் வந்து "காப்டன்! இந்த ஆளை யெடுத் துப்போய் நகரஹோட்டலில் சேர்த்து வேண்டிய சிகிச் சைசெய்யத் தங்களுக்கு விருப்பந்தானே?" என்றான்.

காப்டென்.-"ஏ ஹோட்டல்காரனே! எட்டப்போ! ஆளைப் பார்த்தால் ஒழுங்காக யிருக்கிறான், இவனிடம் நல்ல பணம் இருக்கும், நமக்கு நல்ல வேட்டை யகப் படும் என்று கருதுகிறாயோ? அப்படியில்லை. இவன் கோட்டை யரண்மனைக்கு விருந்தாளியாக வரத் தகுதியுடையவன்—தெரிகிறதா?" என்றான்.

இக்கடுமொழிகளைக் கேட்டதே ஹோட்டல் காரன் மிக்க நாணமடைந்து எட்டச் சென்றான். காப்டென்

தன் ஆட்களைக் கொண்டு மூர்ச்சையாக விருக்கும் அம் மனிதனைக் கோட்டைக்கு எடுத்துக்கொண்டு சென்றான். அங்குசென்று அவர்கள் அவனை யொரு அறையில் ஒரு மஞ்சத்தில் படுக்க வைத்து, ஈரஉடைகளைக்களைந்து, வேறு உடைகளை யணிந்தார்கள். சற்றுநேரம் பொறுத்து அவன் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தான். காப்டன் கொஞ்சம் கொஞ்சமாக இரண்டுதரம் குடிப் பாட்டிய சாராயத்தால் அவன் சீக்கிரம் ஸ்மரணையடைந்தான்.

கண்களைத் திறந்து பார்த்தபோது தான் இருக்கும் அறை நாகரீகமாய் அலங்கரிக்கப்பட் டிருப்பதை யுணர்ந்து, "ஆ! நான் எங்கிருக்கிறேன். என்னைக்காப்பாற்றிய புண்ணியவான்கள் யார்?" என்றான். காப்டென் உண்மையாக அன்புடையவன் போல் மிக்க மரியாதையோடு "தாங்கள் தேகத்திற்கும் மனதிற்கும் கஷ்டம் கொடாமல் சற்று நேரம் நிம்மதியாகப் பேசாமலிருப்பது நலம்" என்றான்.

அம்மனிதன்.—"ஆ! அக்கோரக்காட்சி! அது இப்போது என் கண் முன் நடப்பது போல் இருக்கிறது. எத்தனைபேர் காப்பாற்றப்பட்டார்கள்?" என்றான்.

காப்டேன்.—"தாங்கள் தவிர மற்ற எல்லாரும் மடிந்து போனார்கள் தாங்கள் சினேகரிடம் சிக்கியிருக்கிறீர்கள். கொஞ்சம் ஒயின் அருந்துங்கள்" என்றான்.

அதற்குள். மாரியாயி என்ற மாது ஒருபுட்டி ஒயின் எடுத்துக்கொண்டு அங்கு வந்தாள். அம்மனிதன் அந்த அறையின் அமைப்பையும் அவர்கள் உபசாரத்தையும் மட்டுமே அச்சமயம் கண்டான். ஆனால் தனக்கிருந்த ஆயாசத்தாலும் மனத்துயரம் கலவரம் முதலியவற்றாலும்

அவர்களுடைய கபடமான பார்வையையும் அவர்களெல்லாம் ஆயுத மணிந்திருப்பதையும் கவனிக்கவில்லை. ஆகையால் காப்டன் கூறியதற்குப் பதிலாக "ஆம், நீங்கள் செய்யும் அன்பான உபசரணையால் அப்படித்தான் நம்புகிறேன்" என்று அவர்களளித்த ஒயினையருந்தி அவர்களுக்கு மிக்க நன்றியோடு வந்தனமளித்துச் சற்றுநேரத்திற்குள் நித்திரைபோய் விட்டான்.

அதன் பிறகு காப்டன் உருத்திரப்பன் நாம் முன் கூறிய சகோதரிகள் இருக்கும் அறைக்குச் சென்று அவர்களைக் கண்டான். அவன் செல்லுமுன்பே மாரியாயி சென்று நடந்த சம்பவத்தை யவர்களிடம் கூறியிருக்கிருள்.

துளசி.—"அந்த ஆள் எப்படி யிருக்கிறன்?" என்றுள்.

காப்டேன்.—ஆபத்தில்லை.

துளசி.—வயது? உருவம்?

காப்டேன்—வயது இருபத்து மூன்று இருபத்து நான்கிருக்கும். அழகு—அத்தகைய அழகுடைய ஆளை நான் இதுகாறும் எங்கும் கண்டதேயில்லை.

துளசி சந்தோஷத்தோடு "பேஷ்-நல்லது. காப்டென்! நாளைக்குச் சாக்கிரதையாகக் காவலர்களை ஏற்படுத்தவேண்டும்" என்றுள்.

காப்டேன்.—தெரிந்துகொண்டேன். பக்ஷி கூண்டில் சிக்கிக்கொண்டது. இனித் தங்கள் அனுமதியின்றி வெளியில் செல்லாது.

துளசி.—ஆம். அதுதான். நாளை காலை நல்ல வசீகரமான முகமுடைய வேலைக்காரர் அந்த ஆளுக்கு உபசரணை செய்ய வேண்டும். ஆ! அந்த ஆளின் உய

ரம்? நம்மிடம் ஒரு தகரப்பெட்டி நிறைய உடைக ளிருக்கின்றன வல்லவா?

காப்டேன்.—ஆம். சின்ன எஜமான் கடைசிதரம் இங்கு வந்திருந்தபோது விட்டுவிட்டுப் போனது. அந்த உடைகள் இந்த ஆளின் அழகை அதிகமாகப் பிரகா சிக்கச்செய்யும்.

துளசி.—என் கருத்தை நீ யறிந்து கொண்டாய். அந்த ஆள் உயர்குடிப் பிறப்புடையவனுக இருப்பானு?

காப்டேன்.—சந்தேகமின்றி. அவருடை அழகும் கம்பீர மும் பொருந்திய உருவமுமே அதைக்காட்டுகிறது.

துளசி.—“சரி. இனி நீ போகலாம்.” என்றதே காப்டன் வந்தனமளித்து விட்டுச் சென்முன்.

சகோதரிகள் மூவரும் மறுநாட் காலே வாலாயமாக எழுந்திருப்பதற்கு முன் எழுந்துகொண்டார்கள். மூவ ரிலும் துளசிபாய் மிக்க உயர்வான ஆடையாபரணங்களே யணிந்துகொண்டாள். மூவரும் நாம் முன் கூறிய அதே அறையில் காலேப்போசனத்திற்கு உட்கார்ந்தார்கள். மேஜையின்மேல் மிக்க உயர்வான சிற்றுண்டிகள், பலகார வகைகள் பழவகைகள், உயர்ந்த சாராயவகைகள் முத லிய யாவும் ஏராளமாகப் பரிமாறப்பட் டிருந்தன.

சற்றுநேரத்திற்குள் இரவு கப்பற் சேதத்தினின்று காப்பாற்றப்பட்ட மனிதன் அந்த அறைக்குள் வந்தான். காப்டென் கூறியவாற்ருல் அவன் அழகுடையவனென்று அவர் எதிர் பார்த்திருந்தாலும்,நேரில் அவன் வனப்பைக் கண்டதும் மிக்க வியப்படைந்து திடுக்கிட்டு விட்டார்கள். இரவு பட்ட கஷ்டத்தால் அவன் முகம் வெளுத்திருந்தது. அதனுல் பார்ப்பவர்களுக்கு அவன்மேல் இரக்கமும் அன் பும் அதிக முண்டாகத்தக்கதா யிருந்ததேயன்றி அவன் அழகை யதி குறைக்கவில்லே.

வந்த மனிதன் அக்கன்னிகைகளை நோக்கி "என் பிராணனைக் காப்பாற்றியதற்காகவும் எனக்குத் தக்க வசதியளித்து உதவி புரிவதற்காகவும் உங்களுக்கு நன்றி யார்ந்த வந்தனமளிக்கிறேன்" என்றான்.

கற்பகம் "ஓ! தாங்கள் வந்தனமளிக்க வேண்டிய அவசியமேயில்லை. அந்தோ அத்தகைய பயங்கரமான புயற்காற்றில் சிக்கிக்கொண்டு அநியாயமாக அழிந்துபோகும் கப்பலில் வந்தவர்களைக் காப்பாற்றவேண்டியது நமது கடமையே யன்றோ. உட்காருங்கள். முன்னே ஆகாரமுண்ணுங்கள். களைப்பைத் தீர்த்துக்கொள்ளுங்கள்" என்று சாதரணமாக அன்போடு உபசரிப்பவளைப்போல் உபசரித்தாள். அவனுக்கு உட்காரும்படி காட்டப்பட்ட ஆசனம் துளசிபாயின் பக்கத்திலிருந்தது. அது தற்செயலாக நேர்ந்த சம்பவமாகவே தோன்றியது.

போஜனம் செய்துகொண் டிருக்கையில் கற்பகமும் அவள் சகோதரிகளும் வந்திருப்பவனுடைய விஷயங்களை யறியக் கருதிச் சாதாரணமாகச் சம்பாஷிப்பவர்கள் போல் சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

கற்பகம்:—தங்களுடைய நாமதேயம் என்னவோ?

அம்மனிதன்:—என் பெயர் உலகநாயகன். நான் சமீப காலம் வரையில் இலவணபுரி யரசருடைய குதிரைப் படையில் மேஜர் பதவியிருந்து இப்போது அதை விட்டு நீங்கியிருக்கிறேன்.

கற்பகம்:—தாங்கள் ஏறிவந்த கப்பல் எந்த நாட்டிற்குச் செல்லப் புறப்பட்டதோ?

உலகநாயகன்:—அது எங்கள் அரசருக்கு மேற்குநாட்டிலுள்ள குடியேற்ற தேசத்திற்குப் புறப்பட்டது.

இதைக் கேட்டதே மூன்று சகோதரிகளும் திடுக்கிட்டு

ஆ! மேற்கு நாட்டிற்கா என்று ஒருவர் முகத்தை யொருவர் குறிப்பாகப் பார்த்துக்கொண்டார்கள். நமது உலக நாயகன் அதைக் கவனிக்கவில்லை. அவன் அவர்கள் கேள்விகளுக்கு விடையளித்துக்கொண் டிருந்தாலும் அவன் மனம் மிக்க துயரத்தோடு ஆழ்ந்த சிந்தனையிலிருந்தது.

கற்பகம்:—தாங்கள் அங்கு என் செல்ல நேர்ந்ததோ?

உலகநாயகன்:—நான் ஒரு முக்கிய விஷயமாக அங்கு செல்லவேண்டிய கவையிருந்தது. இப்போது அந்த எண்ணத்தை யடியோடு விட்டுவிட வேண்டிய தாயிற்று.

கற்பகம்:—என் அடியோடு விட்டுவிடவேண்டும்?

உலக:—நான் போகும் வேலை ஒரு தவணைக்குள் முடிய வேண்டும். இன்றேல் பயனில்லை. நான் ஏறிவந்த கப்பல் மிகுந்த வேகமாகச் செல்லக்கூடியது. அதில் சென்றால் மூன்றாவது மாதம் திரும்பி வந்துவிடலாகும். இப்போது நான் இதற்கென்று ஒரு கப்பலை யமர்த்திக்கொண்டு புறப்படுவதெனின் மிக்க ஆலசியமாகும்—தவணைக்குள் திரும்பிவர முடியாது. ஆகையால் இனி அந்த யோசனையை விட்டுவிட்டுக் கூடிய சீக்கிரத்தில் இலவணபுரி போய்ச்சேரவேண்டியதே.

கற்பம்:--இலவணபுரியில் தங்களுக்குத் தாய்தந்தை மனைவி முதலியோ ருளரோ?

உலக:—ஆம் மனைவியிருக்கிறாள். நண்பர்கள் இருக்கிறார்கள். நான் சீக்கிரம் செல்லாவிட்டால் அவர்கள் மிக்க கலவரமடைவார்கள்.

துளசிபாய்:—தாங்கள் பூரணமாகச் சுகமடையுமுன் இதை விட்டுச் செல்லலாகாது. கப்பல் சேதமடைந்த சங்

கதி மிக்க ஆலசியமாகவே இலவணபுரிக்கு எட்டும். அக்கப்பலி லிருந்தவர்களில் உயிர்தப்பியவர் தாங்கள் ஒருவரேயாதலால், தாங்களே அச்சங்கதியை முதல் முதல் அங்கு கொண்டுபோகிறவராகவிருக்கும்.

அம்மொழிகளை மரியாதையான உபசாரமொழிக ளாகக் கருதிக்கொண்ட உலகநாயகன், "மிக்க வந்தனம். ஆயினும் நாளைக்கு நான் இங்கிருந்து புறப்பட ஒரு கப் பல் அகப்படுமோ?" என்றான்.

கற்பகம்:—எங்கள் கப்பல்களில் ஒன்றையே உங்கள் பிரயா ணத்திற்கு உதவியாகும்படிக் கட்டளையிடுகிறோம். ஆனால் கடலின் கொந்தளிப்பு இப்போதிருக்கும் நிலைமையில், இன்னும் இருபத்துநான்குமணி நேர மேனும் கழித்துத்தான் கப்பல் புறப்படும்.

துளசி:—"எங்கள் தமக்கை கூறியது உண்மையே. நாளை க்கு நீங்கள் புறப்படுவதற்கு ஒரு கப்பல் ஆயத்தம் செய்யப்படும்" என்றாள்.

அதற்குள் போசனம் அருந்தியாயிற்று. கற்பகம் உலகநாயகனை நோக்கி "இன்று நான் என் தந்தை யருகி லிருந்து, அவருக்கு உபசாரம் செய்யவேண்டும். நாங்கள் தினம் முறையாக வேலைகளைப் பகிர்ந்துகொள்வது வழக் கம். துளசிபாயிக்கு இன்று வேலையில்லை. ஆகையால் அவள் தங்களை யழைத்துப்போய் கோட்டை முழுமையும் காட்டுவாள். மதில் சுவர்மேல் உலவிச் செல்வது மிக்க உல்லாசத்தை யளிக்கும்—அதனால் தங்கள் சுகமும் விர்த் தியடையும்" என்றாள்.

உலகநாயகன் வெண்கலக்கோட்டையைப் பற்றியும், அதன் எஜமானைப்பற்றியும் அவர் குடும்பத்தைப்பற்றி யும் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் அங்குள்ள கெட்ட

நடக்கைகளைப் பற்றியும் அநீதங்களைப் பற்றியும் அவன் சற்றும் கேள்விப்பட்டதேயில்லை. ஆகையால் அவர்கள் வார்த்தைகளை யெல்லாம் கௌரவமான உபசாரமொழிகளாக நம்பிக்கொண்டானே யன்றி ஏதோ உட்கருத்தை வைத்துக்கொண் டிருக்கிறார்களென்று எள்ளளவும் கருதவில்லை. அவனுக்குத் தன் அறைக்குச்சென்று சிந்தனையி லிருக்கவே பிரியம். ஏனெனில் தன் மாமனுரைப் பிராணுபத்திலிருந்து காப்பாற்ற அவன் ஒரு உத்தேசத்தை நம்பி மேற்கு நாட்டிற்குப் புறப்பட்டான். இப்போது அது தவறிவிட்டதால் வேறு எவ்வித முயற்சியேனும் செய்து அவரைக் காப்பாற்றவேண்டு மென்பதே அவன் மனதிற் பெருஞ்சிந்தனையாக விருக்கிறது. ஆயினும் இப்போது உலவவரமாட்டே னென்றால் அக்கன்னிகைகளை, அதிலும் முக்கியமாகத் துளசிபாயை யவமதித்ததாகக் கருதப்படும். ஆதலால் அவளை நோக்கி "இதோ இன்னும் இரண்டு நிமிடங்களில் உலவச்செல்ல ஆயத்தமாக வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டுத் தன் அறையை நோக்கிச் சென்றான்.

---

## 46-வது அத்தியாயம்

சகோதரிகளின் ஆலோசனை—பிரேமநாதன்—
பிரேமநாதனும் ஹோட்டல் காரனும்—
கோட்டையைச்சேர்ந்த சில மர்மங்கள்—புதுபிரயாணி.

---

உலகநாயகன் அறையைவிட்டுச் சென்றதே சகோதரிகள் மூவரும் கண்களால் ஒருவருக்கொருவர் அனேகவிதமாகச் சமிக்கை செய்துகொண்டார்கள். அச்

சமிக்கைகளால் அவர்களுக்குள் எவ்வளவோ சம்பாஷணை நடந்துவிட்டதென்று கருதவேண்டும்.

கற்பகம்:—இவன் நல்ல அழகுடையவனே.

சண்பகம்:—மிக்க சொகுசான புருடன்.

துளசிபாய்:-ஆம். என் மனதிற்கு எல்லா விஷயங்களிலும் திருப்தியான உருவத்தை யுடையவனே. சந்தேகமேயில்லை.

கற்பகம்:—ஆயினும் நீ இளகியமனதை யுடையவளாய் விட மாட்டாயென்று நம்புகிறேன்.

துளசி:—கோபத்தோடு "யார் நானா? ஒருக்காலுமில்லை. நமக்குள் இருக்கும் ஏற்பாட்டின்படி எப்போதும் நம்முடைய அதிகாரமும் செல்வாக்குமே மேம்பட்டிருக்கவேண்டுமே யன்றி மற்ற யாவும் நமது வல்லமையை யதிகமாக்கிக்கொள்வதற்கே யன்றி நமக்கு மேல் ஒருவர் எஜமானராகவா! சே!" என்றாள்.

கற்பகம்:—கோபிக்காதே. பேச்சு முறைமைக்குக் கூறியதே யன்றி நீ மனோவுறுதியிற் குறைவடைவாயென்று எண்ணியல்ல.

துளசிபாய் கற்பகத்தை நோக்கி "அக்கா—உன் பாகத்திற்கு வந்தவனுடைய இரும்புபோன்ற மனோ வல்லமையையும் பிடிவாதமான வைராக்கியத்தையும் அடக்கியவனை யிணங்கும்படிச்செய்ய நீ கடினமான ஆயுதங்களை யுபயோகிப்பதாயினும் பயமுறுத்துவதாயினும் அவனை வழிக்கு வரச்செய்வது மிக்க பிரயாசையாகவே யிருக்குமெனக் கருதுகிறேன்" என்று கூறியபிறகு,

"சண்பக அக்காள்! உன் பங்குக்குவந்த ஆள் மிருதுவான மனமுடையவன்போல் காணப்படுகிறபடியால் அவன் விஷயத்தில் உனக்கு அதிக கஷ்டம் ஏற்படா

தென்றே தோன்றுகிறது. என் வரையில், இந்த உலக நாயகனை வசப்படுத்துவது பெரிய அக்காளுடைய ஆளின் விஷயத்தில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறதோ, அவ்வளவு கஷ்டம் உண்டாகுமென்றே நினைக்கிறேன். இவன் தன் மனைவிமேல் மிக்க அன்புடையவனுக விருக்கிறுன். அவளிடம் போய்ச்சேர மிக்க ஆவலுடையவனுக விருக்கிறுன் என்று நன்கு விளங்குகிறது'' என்றுள்.

கற்பகம்:—அவன் மணம்செய்துகொண் டிருக்கிறுன் என்பதைப்பற்றி பயப்படவேண்டிய அவசியமில்லை.

துளசி:—சே. அதைப்பற்றி யொருபயமுமில்லை. நமது தீவின் ஆசாரங்களும் சட்டங்களும் முழுமையும் வேறுவித மானவை. நமது தந்தை பேனுவின் ஒரு கீறலால் அவன் கலியாண ஒப்பந்தத்தை உடைத்து விடுவார். அந்தத் தீர்ப்பு இலவணபுரியில் செல்லா தெனினும் நமது தீவில் எப்போதும் செல்லும். பிறகு நான் கருதினுல் என் கலியாண பந்தத்திலிருந்து ஒரு விநாடியில் விலகிக் கொள்வேன்'' என்று கீழே குறிப்பாய் நோக்கினுள். மற்ற இரண்டு சகோதரிகளும் அதை யுணர்ந்தார்கள்.

கற்பகம் "ஆம் அங்கேயிருந்து எந்த சங்கதியும் வெளிவராது'' என்றுள். அப்போது அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்ட பார்வையை அன்னிபர் யாரேனும் பார்த்தால் நடுங்கி விடுவார்கள்; அவ்வளவு பயங்கரமாக விருந்தது.

துளசி "கற்பக அக்கா! நீ நாளைக்குக் கலியாண ஒப்பந்த விடுதலைப்பத்திரம் ஒன்று தயார்செய்து நமது தந்தையின் கையொப்பத்தை வாங்கிவிடு. நமது கப்பற்சேத மடைந்த விருந்தாளி நமது நிபந்தனைகளுக்கு ஒப்புக்

கொள்ளும்போது யாவும் ஆயத்தமாக விருக்கட்டும்'' என்முள்.

சண்பகம்.—''துளசி! நீ யவனை யடக்க வழியறிவாயல்லவா. ஏனெனில் நாம் நெடுநாட்களாக ஆலோசனை செய்துக்கொண் டிருந்தபடி இப்போதுதான் நம்மூவர்க்கும் மூவர் சிக்கியிருக்கிறுர்கள். இச்சமயமே நாம் காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டும். நம் தந்தையோ எந்தச் சமயத்தில் இறந்துவிடுவாரோ தெரியாது. அப்படி நேர்ந்தால் உடனே நமது தமையனுகிய துஷ்டன் வந்து விடுவான்; பிறகு நமக்கு ஒருவித அதிகாரமும் கிடைக்காது. ஆ! ஆள் வரும் சத்தம் கேட்கிறது'' என்றுள்.

உடனே இச்சகோதரிகளின் பயங்கரமான முகக்குறியனைத்து மாறி, சந்தோஷமும் களங்க மற்றதுமாகிய முகமுடையவர்க ளானுர்கள்.

இரண்டொரு விநுடிகளுக்குள் உலகநாயகன் அங்கு வந்தான். துளசிபாய் உடனே மேல் போர்வையையெடுத்துக்கொண்டு அவனை யழைத்துக் கொண்டு மதில் சுவரின்மேல் உலவச் சென்றுள். துளசிபாய் அவர்கள் ஆசாரப்படி உலகநாயகன் தோளைப் பற்றிக்கொண்டு செல்லும்போது தன்னுலான சாமார்த்திய மனைத்தும் காட்டி மயக்க முயன்றுள். காலம் கழிவது அவனுக்குத் தெரியாதிருப்பதற்காக அக்கோட்டையின் பலவிடங்களில் பூர்வீகத்தில் நடந்த விசேஷங்களைப்பற்றி கூறிக்கொண்டே சென்றுள். ஆனல் அவனுக்குச் சற்றும் சந்தேகம் உண்டாகும் வண்ணம் அளவு கடந்து செல்லாமல் மிக்க சாக்கிரதையாக நடந்து கொண்டாள்.

உலகநாயகன் மனம் தன் மாமனுரை மீட்க வேண்டு

மென்ற கலவரத்தால் ஆழ்ந்த சிந்தனையிலிருந்த படியால் இவள் ஜாலங்கள் ஒன்றையும் அவன் கவனிக்கவேயில்லை. இவர்கள் நெடுநேரம் மதில் சுவர்மேல் உலவிக்கொண்டே சென்றபோது, கோட்டை யகழியின் வெளிப்பக்கமுள்ள மேட்டின்மேல் யாரோ இருவர் உலவிக்கொண்டே வருவதை உலகநாயகன் தற்செயலாய்க் கண்டான். அவர்களில் வாலிபனாக விருந்த ஒருவனைக் கண்டதும் உலகநாயகனுக்கு மிக்க வியப்பும் கலவரமும் உண்டாயிற்று. சற்று நேரம் உற்றுநோக்கி "இராது இராது இப்போது அவன் எவ்வளவோ தூரத்திலிருக்கவேண்டும்" என்றான்.

பக்கத்திலிருந்த துளசிபாய் "என்ன" என்றாள். உலகநாயகன் அதோ செல்கிற ஆள் எனக்குத் தெரிந்த ஒருவனைப்போ லிருக்கிறான். ஆயினும் அப்படியிராது. எதற்கும் போய் பார்த்து வருகிறேன். இரண்டு நிமிடம் பொறும்" என்று அடியெடுத்து வைத்தான். தந்திர ஜாலங்கற்ற துளசிபாய் "ஓ! அந்த ஆள் எனக்குத் தெரியும். அவன் இந்நகரத்திலுள்ள ஒரு வர்த்தகன் மகன். இவன் இந்த ஊரை விட்டு இதுகாறும் வெளியே சென்றவனேயல்ல" என்றாள். அவள் வார்த்தைகளை உண்மையென நம்பிய உலகநாயகன் "ஓ அப்படியாயின் சரிதான். அவனல்ல" என்று கூறிவிட்டு அப்போது இவர்கள் புறப்பட்டு இரண்டு மூன்று மணி நேரம் ஆய்விட்டதால் மாளிகைக்குள் செல்லத் திரும்பினார்கள்.

இவர்கள் உள்ளே சென்றதும், முன் சகோதரிகள் காலைப்போசன மருந்திய அறையிலேயே இவர்களுக்கு நல்ல நேர்த்தியான அறுசுவையுண்டி பரிமாறப்பட்டது. சகோதரிகள் உலகநாயகன் மனம் வேறு விஷயங்களில் செல்லா வண்ணம் வேடிக்கையான சம்பாஷணையிலேயே காலத்தைப் போக்கினார்கள். இவ்வாறே மாலைப்போதும்

கழிந்து இரவு வந்ததும் யாவரும் போஜன மருந்திய பின் கற்பகம் உலகநாயகனை நோக்கி, "எங்கள் காரியஸ்தன் மூலமாக நாளை காலை இலவணபுரிக்குத் தங்களை யேற்றிச் செல்வதற்காக ஒரு கப்பல் ஆயத்தப்படுத்தியிருக்கிறோம்" என்றாள். உலகநாயகன் அதற்காக மிக்க நன்றியோடு வந்தன மளித்தான். அவர்கள் நடக்கைகளனைத்தும் சாதாரணமாக உத்தம குணமுடையோர் அத்தகைய சந்தர்ப்பத்தில் தங்கள் விருந்தினருக்குச் செய்யும் அன்பார்ந்த உபசாரங்கள் போல் தோன்றின. அவர்கள் உலகநாயகனுக்குச் சற்றேனும் சந்தேகம் உண்டாகாத அவ்வளவு சாக்கிரதையோடு நடந்து கொண்டார்கள். கடைசியில் ஒன்பது மணிக்குமேல் உலகநாயகன் சயனித்துக் கொள்ளத் தனக்கு விடப்பட்ட அறைக்குச் சென்றான்.

அவன் சென்றதே கன்னிகைகள் மூவரும் பயங்கரமான மர்மத்தோடு சமிக்கைகளாலும் குறிப்பு மொழிகளாலும் சற்று நேரம் சம்பாஷித்த பின்னர் மாரியாயியை யழைத்துக் காப்டென் உருத்திரப்பனை இங்கு வரும்படி கூறு என்று ஆக்கியாபித்தார்கள். அவள் சென்றதே துளசிபாய் "நான் கூறியபடி இவனை யிணங்கும்படிச் செய்ய மிக்க கஷ்டம் எடுத்துக்கொள்ள நேரிடும் போலவே தோன்றுகிறது" என்றாள்.

சண்பகம்:—அவன் எப்படிப்பட்ட மன உருதியுடையவனாயினும் அடக்கிவிட உன்னால் முடியுமல்லவா?

துளசி:—"ஆகா. எப்படிப்பட்ட இரும்புநெஞ்சனையும் ஒடுங்கச் செய்யப் பல வழிகளிருக்கின்றன" என்று குறிப்பாகத் தன் சகோதரிகளை நோக்கினாள்.

அதற்குள் காப்டென் அறைக்குள் வந்து அவர்களுக்கு வந்தனமளித்து நின்றான். துளசிபாய் அவனை

நோக்கி "என்ன நான் கூறிய அடையாளங்களுள்ள அந்த ஆளைப்பற்றி விசாரித்தாயா?" என்றாள்.

காப்டேன்:—இன்னும் அதைப்பற்றிய விவரம் ஒன்றும் தெரியவில்லை. அம்மாதிரியான மனிதன் ஒருவன் நகரில் வந்திருக்கிறான். அவன் அந்நியநாட்டான். அதற்களிக்கவேண்டிய வரியை யளித்து விட்டான். அதற்குமேல் அவன் யார், இங்கு என்ன செய்கிறான் முதலிய ஒன்றும் இன்னும் தெரியாது.

துளசி:—அதைப்பற்றி அவசியமில்லை. அவன் பெயர் என்ன?

காப்டேன்:—பெயர் பிரேமநாதன்.

துளசி:—உலகநாயன் என்னமோ அவனைப் பார்த்துவிட்டான். அவன் உலகநாயகனைப் பார்க்கவில்லை. ஆகையால் அவனைப்பற்றி இன்னும் விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. மேலும் உலகநாயகன் சீக்கிரத்தில் எந்த நண்பரும்..." என்று குறிப்பாய்த் தன் சகோதரிகளை நோக்கினாள்.

சண்பகம்:—"எந்த நண்பரும் காணக்கூடாத இடத்தில் போய்ச் சேரப்போகிறான்" என்றாள்.

காப்டேன்:—"அப்படியாயின் எஜமாட்டிகளின் கட்டளை யென்னவோ" என்றான்.

துளசிபாய்.—"நீ அதைச் செய்துவிடு" என்றாள். உடனே மூவரும் குறிப்பாய் அவனை நோக்கியதை யன்னியர் பார்த்தால் அப்பார்வையில் ஏதோ பயங்கரமான மர்மம் இருக்கிறதென்று நன்றாக விளங்கி விடுவதோடு அவர்களுக்கு நடுக்கத்தையு முண்டாக்கும். காப்டன் அக்கட்டளையை நிறைவேற்றினானா என்பதும் அது என்ன மர்மமான கட்டளை யென்பதும் பின்னால் விளங்கும்.

காப்டென் சென்றதே துளசி தன் தமக்கைகளை நோக்கி "நான் சமயத்தில் அம்மனிதன் எனக்குத் தெரிந்தவனே யென்று தந்திரமாகக் கூறியது நல்லதாயிற்று. இன்றேல் உலகநாயகன் பாய்ந்துபோய் அவனைக் காண்பதற் கிருந்தான்" என்றாள்.

கற்பகம்:—"அப்படி நேர்ந்திருந்தால் இப்போது நடக்கப்போகும் வேலையைப் பட்டப்பகலிலேயே செய்ய நேர்ந்திருக்கும்" என்றாள்.

சண்பகவல்லி:—"அத்தகைய காரியங்களை எப்போதும் இராக்கால இருளில் செய்வதே உத்தமமாகும்" என்றாள்.

* * * * *

இப்போது நாம் "உலகநாயகன் கண்டு அடையாளமறிந்துகொண்ட மனிதன் யார்? அங்கேன் வந்தான்?" என்பதைக் கவனிப்போம். அம்மனிதன் வாலிபனே. அவன் பெயர் பிரேமநாதன் என்று காப்டென் உருத்திரப்பன் கூறியிருக்கிறான். பிரேமநாதனுக்கு வயது பதினெட்டு பத்தொன்பதே யாகிறது. அவன் அதிக பலாட்டியனல்லாவிடினும் தன் இடையிற் றொங்கும் வாளாயுதத்தைச் சுத்த வீரத்தன்மையோடு உபயோகிக்கும் சாமர்த்தியம் பூரணமாக வுடையவன். அவன் அழகிய உருவமுடையவன். நாகரீகமும் நாணயமுமுடையவனே. ஆனால் அவன் அணிந்திருக்கும் உடை முரட்டுத்தனமானதாகவே யிருந்தது. அதோடு அவ்வுடை யவன் தேகத்திற்கென்று தைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவன் வெண்கலக் கோட்டையின் அகழி யோரமாகச் சென்றுகொண்டிருந்தது உல்லாசமாக உலவுவதற்கென்று வெளிக்குத் தோன்றியது. உண்மை யப்படியில்லை.

யாரேனும் அவன் அருகில் அப்போது நின்றுபார்த்தால் அவன் கீழ்க்கண்ணுல் அக்கோட்டையிலுள்ள சாளரங்கள் ஒவ்வொன்றையும் ஆவலோடும் பயத்தோடும் பார்க்கிறுனென்று தெரியும். அதுமட்டுமல்ல, அவன் முகத்தில் ஆழ்ந்த துயரம் இருந்தது. அவன் யாருடைய உருவத்தையோ சாளரத்தில் காணலாமென்று கருதி மிக்க ஆவலோடு பார்க்கிறுன் என்று அறியலாம். இவன் யார்? அக்கோட்டையில் அவன் யாரை எதிர்பார்க்கிறுன்? அவனுக்குள்ள துயரத்தால் அவன் தேடும் ஆள் அவன் மிக்க அன்புவைத்துள்ள சுற்றத்தாராகவோ அல்லது நண்பராகவோ இருக்கவேண்டும் என்று தெரிகிறது.

அவன் அவ்வாறு வெளியிலிருப்போர் தான் கோட்டையை அக்கரையாகப் பார்ப்பதாய்க் கருதாவண்ணம் பார்த்துக்கொண்டே செல்லுகையில் ஒரு மாதும் ஒரு வாலிபனும் மதிலின்மேல் வந்துகொண் டிருப்பதைக் கண்டான். முன்னே அம்மாதை யுற்றுநோக்கி "ஆ! துளசிபாய்" என்றதும், மறு விநாடி அவள் பக்கத்தில் வரும் ஆடவனைக் கவனித்தான். உடனே திடுக்கிட்டு உற்று நோக்கியதும் "உலகநாயகனே! அய்யோ கடவுளே! இதென்ன விபரீதத்தின்மேல் விபரீதம்--ஆபத்துக்குமேல் ஆபத்து" என்றுன். அப்போதுதான் உலகநாயகன் அவன் முகத்தைப்பார்த்தது. ஆனுல் பிரேமநாதன் உலகநாயகனை யறிந்துகொண்டதே மறுபடி கோட்டையின் பக்கம் நோக்காமலே நகரை நோக்கிச் சென்றுன்.

அவன் துயரமான ஆழ்ந்த சிந்தனையோடு நகரத்திலுள்ள ஹோட்டலுக்குள் நுழைந்தான். உள்ளே நுழையும்போது தன் துயரத்தை மறைத்து சந்தோஷமாகவும் கேளிக்கையாகவும் காலத்தைக் கழித்துவிட்டு வருபவன் முகம்போல் தோற்றச் செய்துகொண்டு ஹோட்டலுக்

குள் நுழைந்து அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். ஹோட்டல்காரன் எங்கே யிந்நேரம் சென்றிருந்தீர்கள் என்ருன். பிரேமநாதன் "மந்தமாக விருந்ததால் கடலோரம் உலவிவரச் சென்றிருந்தேன். ஆயினும் போஜனவேளை இன்னும் ஒன்றரைமணி நேரமிருப்பதால் ஒரு புட்டி ஒயின் கொண்டுவாரும்" என்ருன். ஹோட்டல்காரன் அவ்வாறே கொண்டு வந்ததும், பிரேமநாதன் ஹோட்டல்காரனை நோக்கி "நீயும் கூட அருந்தவேண்டும். ஏனெனில் ஒருவனுகக் குடிக்க என்னுல் முடியாதென்ருன். இன்னொருவருடைய செலவில் குடிக்கப் பிரியமுடையவனுன ஹோட்டல்காரன் சந்தோஷமடைந்து பிரேமநாதனேடு சந்தோஷமாகக் குடிக்கத் தொடங்கினுன்.

ஹோட்டல்காரன்:—நான் அளிக்கும் இந்த ஒயினும் என் ஹோட்டலின் ஆகாரமும் எப்படி யிருக்கிறது ?

பிரேமநாதன்:—ஆ ! இங்கு நீ யளிக்கும் ஒயின் மிக்க நேர்த்தியானது. ஆகாரமோ என் மனதிற்கு மிக்க திருப்தியாக விருக்கிறது. நான் இந்நகரத்திற்கு வந்ததுமுதல் இங்கேயே போஜன மருந்துவதாலேயே நீ நான் கூறிய உண்மையை யறிந்துகொள்ளலாம்.

ஹோட்டல்:—"ஆ! உன்னேடு சகவாசம் செய்ய நான் மிக்க சந்தோஷமுடையவனுக விருக்கிறேன். சில தினங்களாக உன்னை யொரு கேள்வி கேட்கலாமென்று ஆவல்கொண் டிருக்கிறேன். ஆனுல் நீ யோக்கியதை யில்லையென்று கருதுவாயோ வென்றஞ்சினேன்" என்ருன்.

பிரேமநாதன்:—நான் உன்னை நண்பனுகக் கருதி யிருக்கும்

# மின் ச[illegible] மாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்தியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க விருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது ஆதிமுதல் அந்தம் வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350 பக்கங்களுக்குமே லுடையது.

**விலை ரூபா 1—8—0.**

புது! துப்பறியும்!! நாவல்!!!

## வெளியாய் விட்டது.

# மஞ்சள் அறையின் மர்மம்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால்வரையப்பட்டது.

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச்செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச்செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1 8 0

தபால் கூலி பிரத்யேகம்.

---

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி,

சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

### ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | | | தினகரசுந்தரி | 1 | 0 |
| 2-பாகமும் ... | 4 | 0 | பத்மாஸனி ... | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் .. | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| கனகபூஷணம் (மறுபதிப்பில்) | | | பவளத்தீவு-அச்சில் | | |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 | பூங்கோதை ... | 0 | 10 |
| ஆனந்தவல்லி ... | 2 | 0 | இந்திராபாய் அச்சில் | | |
| மதனபூஷணம் .. | 1 | 0 | குணசுந்தரன் ... | 0 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள் | 1 | 12 | சகோதரவாஞ்சை | 0 | 6 |
| | | | ஹை ஸ்கூல் பதிப்பு ... | 0 | 7 |

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.